விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து *Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 14 வெள்ளிக்கிழமை (28.06.2002) தொலைபேசி 3378 ஒலி 191


மங்கையர் மனம் கொள்ளை
கொள்ளும் தங்க
நகைகளுக்கு
சாரங்கா
நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 2480

### விடுதலைப் புலிகள் தாக்கப்பட்டதன் எதிரொலி

# ஏழு வருடங்களின் பின்னர் நேற்று
# மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி!

## காவலூரில் சன சமுத்திரம்

(எமது நிருபர்கள்)

**தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் பொருட்டும் நிராயுத பாணிகளாக மக்கள் பணிக்காக தீவகம் சென்ற விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் செம் மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோரை வேலணையில் வைத்து தாக்கிய சம்பவத்தைக் கண்டித்தும், நிரந்தர சமாதானத்தைக் கட்டி யெழுப்புவதற்காகவும் குடாநாடு தழுவிய மக்கள் எழுச்சிப் பேரணி நேற்று யாழ் நகரில் இருந்து ஊர்காவற்றுறையை நோக்கிச் சென்றது.**

**யாழ் துரையப்பா விளையாட்டு அரங்க மைதானத்தில் இருந்து நேற்று முற்பகல் 11மணிக்கு புறப்பட்ட பேரணியில் பல்லாயிரக்கணக் கான மக்கள் அலைஅலையாகக் கலந்து கொண்டனர்.**

யாழ் துரையப்பா விளையாட்ட ரங்கில் இருந்து புறப்பட்ட மக்கள் எழுச்சி வாகனப் பேரணியில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு முன்னே செல்ல வடபிராந்திய போக்குவரத் துச் சபை பஸ் வண்டிகள், பலநோக் குக் கூட்டுறவுச் சங்க லொறிகள், தனியார் மினிபஸ் வண்டிகள், முச் சக்கர வண்டிகள். மோட்டார் சயிக் கிள்கள் எனப் பல்வேறு வூாகனங் கள் கலந்து கொண்டன.

வாகனத் தொடரணி அல்லைப் பிட்டிச் சந்தியைச் சென்றடைந்தது. அங்கு வழமையை விட ஏராளமான

(10ம் பக்கம் பார்க்க)



ஊர்காவற்றுறை நோக்கி பேரணி செல்லும் காட்சி
(மேலதிக படங்கள் உள்பக்கத்தில்)

### தமிழ் முஸ்லிம் குழுக்களிடையே

# வாழைச்சேனையில் இனக்கலவரம்
# கிரனெற் வீச்சில் மூவர் பலி!

## கடைகள், வாகனங்கள் தீக்கிரை

(மட்டக்களப்பு நிருபர்)

**மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இன வன்முறைச் சம்பவத்தால் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 50க்கும் அதிகமானோர். படுகாயமடைந்தும் ஆறு கடைகள் கொள்ளையிடப்பட்டபின் தீக்கிரையாக்கப்பட்டும் 20க்கும் மேற்பட்ட வாகனங்கள் எரிக்கப்பட்டும் உள்ளன.**

**இதனை அடுத்து தமிழ் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகிறார்கள்.**

**இதனை அடுத்து பொலநறுவையில் இருந்து மேலதிக பொலிஸார் வாழைச்சேனைப் பகுதிக்கு வரவழைக்கப்பட்டு நேற்றுப்பிற்பகல் 4மணி முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் நேற்று பிற்பகல் இடம் பெற்ற இன வன்முறைச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

நேற்றுக்காலை மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை புறப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் வண்டி மீது முஸ்லிம் இளைஞர

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களை அமைதி காக்குமாறு புலிகளின் அரசியல் துறை கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச் சேனைப் பகுதியில் வெடித்த மோதல் சம்ப வம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை அரசியல் துறை நேற்று மாலை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழீழ மக்களே விழிப்பாக இருங்கள் என்ற தலைப்பில் விடுத லைப்புலிகள் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை மூலம் எமது உரிமையைப் பெறுவதை விரும்பாத ஒரு சில தீய சக்திகள் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிரச்சினையை ஏற்படுத்தி அப்பாவி உயிர்களைக் கொன்று தமிழ் பேசும் மக்களின் பொருளாதாரத்தினைச் சிதைக்க எத்தனிக்கின்றனர். இதன் தொடக்கமாகவே இன்று ஓட்டமாவடியில

(10ம் பக்கம் பார்க்க)

**பேரணியில் ஈ.பி.டி.பிக்கு எதிராகக் கோஷம்**

## டக்ளஸ் தேவானந்தாவின் உருவப்படம் தீயிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட் டரங்கில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிய மாபெரும் கண்டன மக் கள் எழுச்சி பேரணியில் சென்றோர் ஈ.பி.டி.பிக் கட்சியினருக்கும், இரா ணுவத்தினருக்கும் எதிரான கோஷங் களை எழுப்பிய வண்ணம் சென்ற னர்.

கண்டனப்பேரணியில்:

- ஈ.பி.டி.பியே சமாதானத் தைக் குழப்பாதே
- தேசவிரோதக் கும்பலே தீவ கத்தில் இருந்து வெளியேறு
- மாற்றானுடன் சேர்ந்து மானத்தை

(10ம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ் கட்டணம் 15 வீதத்தால் உயரும்

(கொழும்பு)

யூலை மாதம் 1ம் திகதி இருந்து தனியார் பஸ் கட்டணங்கள் 15 சதவீதத்தால் உயர்த்தப்படவுள் ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## எழுச்சிப் பேரணியை படையினர் படம்பிடித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து ஊர்கா வற்றுறை நோக்கிப் நேற்று முற் பகல் 11 மணிக்கு ஆரம்பமான மக்கள் கண்டன எழுச்சிப் பேர ணியில் சென்றவர்களை அல்லைப் பிட்டிச் சந்தியில் இராணுவமும் பொலிசாரும் இணைந்து வீடியோ படம் எடுத்தனர்.

கண்டனப் பேரணியும் பொதுக்கூட் டமும் முடிவடைந்து பேரணியில் கலந்து கொண்டோர் யாழ் நகர்

(10ம் பக்கம் பார்க்க)

# போராட்டத்தின் மூலமே தமிழர்களின் பலத்தை சிங்கள மக்கள் அறிந்தனர்

## வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சிறில்

(யாழ்ப்பாணம்)

உலகிலே வாழும் ஒவ்வொரு உயிரினங்களினதும் வாழ்வைத் தீர்மானிப்பது அதன் போராடும் சக்திதான். வல்லமையுள்ளவர்கள் உயிர்தப்பி வாழ்வதும் வல்லமையற்றவர்கள் அழிந்து ஒழிந்து போவதும் இயற்கையின் நியதி. தமிழர்கள் பலவீனமானவர்கள், பச்சோந்திகள், பயந்தான்கொள்ளிகள் என நினைத்த சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிராக தமிழர்கள் போராட முற்பட்ட காரணத்தினால் தான் தமிழனின் பலம் தமிழருக்குத் தெரிந்தது.

தமிழனின் பலம் சிங்களவருக்குத் தெரிந்தது- தமிழனின் பலம் உலகம் அறிந்துகொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது வேலணையில் இடம்பெற்ற தாக்குதலைக் கண்டித்து நேற்றைய தினம் ஊர்காவற்றுறை திறந்த வெளியரங்கில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

நாம் இன்று சகல வளத்துடனும் நிற்கின்றோம். இந்தப் பலத்தையும் வளத்தையும் தந்தவர்கள் இந்த மண்ணில் வாழுகின்ற வாழத் துடிக்கின்ற எம் அரும்பெரும் ஈழத்தமிழர்கள்என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இந்த மக்களுடைய அரசியல் பொருளாதார சமூக விழிப்புணர்ச்சிக்காக அரசியல் பணிகளை மேற்கொள்வதற்காகவே தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த மண்ணில் கால் பதித்தார்கள். தம்முடைய மக்களின் வாழ்வுரிமைக்காக, மக்களின் விடுதலைக்காக அரசியல் பணிகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

அவர்கள் மிகப் பெரிய பலத்துடன் தான் இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்துள்ளார்கள். உலகிலே போராடுகின்ற அத்தனை போராடும் சக்திகளுக்கும் நாம் ஊன்று சக்தியாக நிற்கின்றோம்.

எமது சுதந்திர விடுதலைக்காக நாம் எத்தனையோ இழப்புகளைச் சந்தித்துள்ளோம். நாம் எவ்வளவற்றையிழந்தாலும் உணர்வையும், உணர்ச்சியையும், நம்பிக்கையையும் இழக்கவில்லை அந்த நம்பிக்கையின் நட்சத்திரங்கள் தான் தமிழர்களுடைய ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்கள் மீது கொண்ட நம்பிக்கையில் தான் எமது மக்கள்இந்தமண்ணில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இந்த நம்பிக்கைக்குக் கிடைத்த சோதனையும் வேதனையும்தான் வேலணையில் இடம்பெற்ற புலிகள் மீதான தாக்குதல் சம்பவம் இந்தச் சம்பவத்தினூடாக பெரியதொரு அனர்த்தம் நிகழ்ந்திருக்கும்.

ஆனால் தேசியத்தலைவர் பிரபாகரனது சொல்லுக்கும் செயலுக்கும் வடிவம்கொடுக்கவேண்டும்என்ற ஒரேஒரு காரணத்தினால் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அமைதியைக் கடைப்பிடித்தார்கள் இந்தஅமைதியை பலவீனம் என்று எவரும் கருதிவிடக்கூடாது

அலையென திரண்டிருக்கும் இந்தமக்கள் வெள்ளத்தினூடாக தேசவிரோதசக்திகளுக்கும்சிங்களதேசத்திற்கும் புலிகள்பின்னே மக்கள் என்பதை நாம்வெளிக்காட்டி நிற்கின்றோம்

எமதுபோராட்டத்தில் நீதி உண்டு எமதுபோராட்டத்தில் உண்மைஉண்டு எமதுபோராட்டத்தில் தர்மம்உண்டு எனவே எமதுஇலட்சியம்வெல்வது உறுதி.

ஏனென்றால் எவராலும் எந்தநேரத்திலும் ஏமாற்ற முடியாத தலைவர் எமக்கு கிடைத்துள்ளார் அவருடைய கரத்தைப் பலப்படுத்துவதன் மூலம்தான் எந்தசக்திகளையும் நாங்கள் முறியடிக்கமுடியும்என்பதை சிறிலங்கா அரசுக்கும் சர்வதேசத்திற்கும் தேசவிரோத சக்திகளுக்கும் எடுத்துக்காட்டியிருக்கின்றோம் என்றுகூறினார்.

(த.41,19,6,2,75)

## இராசி பலன்

28- 06- 2002

(ஆனி 14 வெள்ளி)

சதுர்த்தி பி. இ. 4. 57வரை

திருவோணம் பி. ப. 2. 06 வரை

இராகு காலம் 10 25- 11.55

நல்ல நேரம் 5. 55- 7. 25

**மேடம்**

எடுத்த முயற்சி தாமதம் தெய்வ சிந்தை, சத்துரு ஜெயம், போசன சுகம்.

**இடபம்**

திடீர்பயணம், தனலாபம், இனிய சம்பவம், உறவினர் சந்திப்பு.

**மிதுனம்**

நல்ல காரியம், மதிப்புக் குறைவு, அதிக பிரயாசை, ஆலய தரிசனம்.

**கடகம்**

குடும்பக்கவலை, கௌரவம், வாக்கு மேன்மை, உடல் வியாதி.

**சிங்கம்**

காரிய தடங்கல், மனச் சுமை, தூரத்துச் செய்தி, பண விரயம்.

**கன்னி**

நண்பர்கள் உதவி, தொழில் கஷ்டம், பணத் தட்டுப்பாடு, வாகன சுகம்.

**துலாம்**

தூரப் பயணம், காரிய அலைச்சல், பெரியோர் ஆதரவு. இனசனக் கொண்டாட்டம்.

**விருச்சிகம்**

மனமகிழ்ச்சி, சென்றஇடத்தில் சிறப்பு, உடல் வியாதி, குடும்ப சிந்தை.

**தனுசு**

மதிப்புக் குறைவு, மாதர் நட்பு, இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு.

**மகரம்**

சத்துரு ஜெயம், தன்னம்பிக்கை, வீண்செலவு, பொருள் சேர்க்கை.

**கும்பம்**

உடல் நலம், முயற்சி கைகூடும், தனலாபம், பிரயாண கஷ்டம்.

**மீனம்**

பெரியோரால் நன்மை, இனிய சம்பவம், தனலாபம், தொழிற் சிறப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

வளவன்

## முன்பள்ளி விளையாட்டு போட்டி

(இருபாலை)

இருபாலை மாதர்கிராம முன்னேற்றச் சங்கமுன்பள்ளியின்வருடாந்தவிளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப3மணிக்கு சங்கத் தலைவி திருமதி வெள்ளை கிரிநாதன் தலைமையில்நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி திணைக்கள தலைமை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த.பாஸ்கரன் பிரதம விருந்தினராகவும்

உரும்பிராய் றோ.க.த பாடசாலைஅதிபர் மு-விக்கினேஸ்வரன் கிராமசேவையாளர் சு.முத்துக்குமாரசாமி ஆகியோர் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர் (த5)


## இலங்கை மின்சார சபை யாழ். பிரதேச அலுவலகம்

### மின் தடை பற்றிய அறிவித்தல்

29-06-2002, 30.06.2002 சனி, ஞாயிறு தினங்களில் அவசர பராமரிப்பு வேலைகள் காரணமாக யாழ். குடாநாட்டில் காலை 08.00 மணி தொடக்கம் மாலை 05.00 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகிறேன்.

2002.07.01ம் திகதியிலிருந்து புதிய மின் பிறப்பாக்கிகள் மூலம் பரீட்சார்த்த அடிப்படையில் சில தினங்களுக்கு மின்விநியோகம் செய்யப்படவிருக்கிறது என்பதையும் சகல மின்பாவனையாளர்களுக்கும் அறியத்தருகிறேன்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறேன்.

**பிரதேச மின் பொறியியலாளர்**
இலங்கை மின்சாரசபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை'

(கி-4536)


## திருஇருதய பெருவிழா

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி தேவாலய பங்கு மக்கள் பங்குத்தந்தை வண. அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை தலைமையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை திரு இருதயநாதர் பெருவிழாவின் பத்தாவது வருடநிறைவினைக் கொண்டாடுகிறார்கள்

அன்றுகாலை7.30மணிக்கு திருப்பலி ஆரம்பமாகி திருச்சொரூபபவனியும் ஆசீரும் வழங்கப்படும் முடிவில் திரு இருதய அங்கத்தவர்களின் ஒன்றுகூடலும் இடம் பெறும். (ம)

## மழலை எழுச்சி ஒலி நாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

விரிவுரையாளர் செல்வி மலர் சின்னையா அவர்களால் சிறுவர்களுக்காகப் புதிய நோக்கில் எழுதப்பட்ட மழலை எழுச்சிப் புத்தகத்திலுள்ள பாடல்களின் ஒலிநாடா வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும்,

யாழ். வலய மாணவர் அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. இராசலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-5)

## ஆதாரம்காட்டி பெறவும்

(மந்திகை)

கொடிகாமம் பஸ்நிலையப் பகுதியில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மற்றும்ஆவணங்கள் அடங்கிய பொதிஒன்று கண்டெடுக்கப்பட்டு நகரிலுள்ள அருள்நாயகி புத்தக நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது உரியவர்கள் ஆதாரம்காட்டி பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (த23)

## குடாநாட்டு வர்த்தகர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

நேற்றையதினம் நடைபெற்ற மக்கள் எழுச்சிப் பேரணிக்குஆதரவாகவர்த்தக நிறுவனங்களைப் பூட்டி பூரண ஒத்துழைப்பு வழங்கிய குடாநாட்டு வர்த்தகர்கள் நாளையும், நாளை மறுதினமும்வர்த்தகநிறுவனங்களைத் திறந்துவியாபாரநடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (த- 5)

## ஒன்றியம் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்தும்சமாதான விரோத சக்திகளைக் கண்டித்தும் நேற்று நடைபெற்ற மக்கள் எழுச்சிப் பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் பங்குபற்றிச் சிறப்பித்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அரச, அரச சார்பற்ற, தனியார் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்டபொதுமக்கள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்கியவாகனஉரிமையாளர்கள் அனைவருக்கும் யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தனது நன்றியைத் தெரிவித்துள்ளது. (த- 5)

## கூட்டுறவு இறுதிப் பரீட்சை ஜூலை கடைசி வாரத்தில்

(வவுனியா)

கூட்டுறவுப்பயிற்சிக்கல்லூரிகளில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் உயர்தர பயிற்சிநெறியின்இடைநிலைப் பரீட்சையும் சாதாரண தரப் பயிற்சிநெறியின்இறுதிப் பரீட்சையும் அடுத்தமாத கடைசி வாரத்தில் நடைபெறவிருப்பதாக வவுனியா கூட்டுறவுப் பயிற்சி நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இதே வேளை நடந்து முடிந்த கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர் பிரிவு, சாதாரண பரீட்சை முடிவுகள் வடக்கு- கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் இந்தியாவில் இருந்து திரும்பியதும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## வேலைநிறுத்தம் முடிவு

(மந்திகை)

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பருத்தித்துறை டிப்போவினுள் புகுந்த இளைஞர் கோஷ்டியொன்று பஸ் நடத்துநர் ஒருவரைத் தாக்கியதை அடுத்து பருத்தித்துறை பஸ்டிப்போ ஊழியர்கள் மேற்கொண்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று முடிவுக்குவந்தது.

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன் மேற்படி சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் டிப்போ ஊழியர்களுக்கு உறுதிமொழி வழங்கியதை அடுத்து வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது.

இதேவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞரைபஸ்டிப்போஊழியர்கள் அடையாளம் காட்டியுள்ளனர். (த-23)

## தமிழக முதல்வரை ஜயலத் இன்று சந்திப்பார்

(சென்னை)

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா இன்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளை மீளவும் இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பாக ஜெயலலிதாவுடன் விரிவாக ஆராயவுள்ளதுடன்அரசு- புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாகவும் அமைச்சர் விளக்கிக் கூறவுள்ளார். (த)

## யாழ். பல்கலையில் 23-வது பட்டமளிப்பு விழா ஒக்டோபர் 6 இல்

யாழ். பல்கலைக்கழகத்தின் 23 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

இப் பட்டமளிப்பு விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும்யாழ்பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது.

இதே வேளை, யாழ். பல்கலைக் கழகத்தின் நடப்பு வருடக் கல்வியாண்டு எதிர் வரும் 30 ஆம் திகதி நிறைவு பெறுகின்றது.

இதனையடுத்து யூலை, ஓகஸ்ட் மாதங்களில் பரீட்சைகள் நடை பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## மாகாண மட்ட கைப்பணிப்பொருள் கண்காட்சி செப்ரெம்பரில்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் துறைத் திணைக்களத்தின் மாகாண மட்டத்திலான கண்காட்சி ஒன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

மிகப் பெரியளவில் இடம் பெறவுள்ள இக் கண் காட்சியில் தத்தம் முயற்சியால்உருவாக்கப்படும் கைப்பணிப் பொருட்களையும்இடம்பெறச் செய்யவிரும்புபவர்கள்மற்றும் மேலதிகத்தகவல்களைப் பெற விரும்புவோர் யாழ். செயலக மாவட்ட தொழிற்றுறைத் திணைக்கள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (உ-6)

## யாழ். மாவட்டத்தில் தொழில் தகவல் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வர்த்தக சம்மேளனம், யாழ். மாவட்டத்தில்தொழில் தகவல் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இத் திட்டமானது அம்பாந்தோட்டை, கண்டி, கொழும்பு போன்ற பகுதிகளில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் வணிகம் சம்பந்தமான தொழில் நுட்ப அறிவுகளைப் பெறுவதுடன், உலக சந்தை வாய்ப்புகளையும் யாழ். வணிகர்கள் பெற்று தமது வர்த்தகத்தை அபிவிருத்தி செய்ய முடியும். (உ-6)

## மீன்பிடிக்க அனுமதி கோரி 521வது படையணியிடம் மகஜர் சமர்ப்பிப்பு

(தென்மராட்சி)

கைதடி, நாவற்குளி பகுதி மீனவர்கள் தம்மை கோயிலாக்கண்டி கடலில் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும் எனக்கோரி521வதுபடையணியிடமும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடமும் மகஜர்களை சமர்ப்பித்துள்ளனர்.

இப்பகுதியில் தற்போது மீளக்குடியமர்ந்த நிலையில் இருந்து வருகின்ற30 குடும்பங்கள் தொழில் இன்றி இருப்பதால் வருமானம் எதனையும் ஈட்டமுடியாமல் இருக்கின்றனர்.

இதுவிடயம் பற்றி தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் 521வது படையணியின் உயர் அதிகாரிக்கு நிலைமையை விளக்கிக் கடிதம் எழுதியுள்ளதாகவும் தெரியவருகின்றது. (உ-77)

## அதியுச்ச வேகத்தில் வாகனங்கள் செல்வதால் பொதுமக்கள் அச்சம்

(தென்மராட்சி)

ஏ-9 பாதையினால்பயணிக்கின்ற வாகனங்கள் அதிஉச்ச வேகத்தில் செலுத்தப்படுவது குறித்து பொதுமக்கள் அச்சமும் கவலையும் கொண்டுள்ளனர்.

விசேடமாக ஏ-9 பாதையில் இயங்குகின்ற பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் வெளியேறுகின்ற தருணங்களிலும் வாகனங்கள் கடும் வேகத்தில் செலுத்தப்படுவது அவதானிக்கப் பட்டுள்ளது.

இத்தகைய வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன் பாடசாலைகளின் வாசல்களுக்கு முன்பாக மஞ்சள் கோடுகள் இடப்படவேண்டும் என சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.யமுனானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-77)

# புலிகளின் படை பல அதிகரிப்பை மக்கள் முழுமையாக ஆதரிக்கின்றனர்

### ஜோசப் எம்.பி வெளிநாட்டு தூதர்களிடம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலேயே வாழ்கின்றனர். அவர்கள் படைபலத்தை அதிகரிப்பதை தமிழ் மக்கள் முழுமையாக ஆதரிக்கின்றனர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பாராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ், நெதர்லாந்து தூதுவர்கள் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து பேசிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இளம் வயதுள்ளவர்களை சேர்த்துக் கொள்வது, ஆட்களை கடத்துதல், கப்பம் வாங்குதல் போன்ற குற்றச் சாட்டுகளை இச் சந்திப்பின்போது மறுத்துரைத்தார்.

தொடர்ந்தும் கருத்துக்கூறுகையில், சர்வதேச சமூகம் இவ் விடயங்களில் மிகவும் கவனிப்பாக உள்ளது.

புலிகள் மீதானகுற்றச் சாட்டுகள் திட்டமிட்டு தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அவை முழுமையாக தெளிவுபடுத்தப்பட்ட குற்றச்சாட்டு இல்லை.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது யுத்தநிறுத்தம் இது ஒரு சமாதானம் அல்ல. எனவே இந்தயுத்தநிறுத்தத்தை குழப்பும் சூழ்நிலை வரும்போது, மீண்டும் ஓர் போர்ஏற்பட வாய்ப்புண்டாகும்.

அவ்வாறான ஒரு சூழலில் தமிழ் மக்களின் பாதுகாப்பு அரணாக காணப்படுபவர்கள் விடுதலைப்புலிகளே, எனவே தமிழ் மக்கள் அவர்களுடைய ஆயுதப்பலம் இராணுவப்பலம் என்பவற்றை சமநிலையாக வைத்திருக்க ஆதரவுவழங்குகின்றனர் என்று தெரிவித்தார். (உ-9

## மறியல் போருக்கு ஆயத்தம்

(செம்பின்பற்று)

நாகர் கோவில் ஊடான போக்குவரத்துப் பாதையை பாவனைக்கு அனுமதிக்காததைக்கண்டித்து விரைவில் மறியல்போராட்டம் ஒன்றை நடத்தும் முயற்சியில் வடமராட்சி கிழக்கிலுள்ள பல்வேறு அமைப்புக்களும் ஈடுபட்டுவருகின்றன. (உ-42)

## விறகு வியாபாரி விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

பேருந்துடன் மோதிய விறகு வியாபாரி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

அல்லைப்பிட்டியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த க. குணரத்தினம் (வயது 23 ) என்பவரே படுகாயமடைந்தவராவார். (உ-6)

## குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தவறுதலாக தீப்பற்றியதில் பலத்த எரிகாயங்களுடன் கடந்த வாரம் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அல்வாய் வடக்கைச் சேர்ந்த ச.தனுஷா (வயது 23) என்ற இளம் குடும்பப்பெண் சிகிச்சை பலனளிக்காத நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார். (உ-6)

## வலைப்பந்தாட்ட வீரர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட வலைப்பந்தாட்டப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் அனைவரையும் எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.4.00 மணிக்கு செயலகத்தில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலகத்திற்குச் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## வாகன விபத்து இரு வாரங்களில் 18பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

மதுபோதையிலும் போக்குவரத்துச் சட்டங்களை மீறும் வகையிலும் பஸ்களைச் செலுத்திய 75 சாரதிகளை குளியாப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மது போதையில்பயணிகளை ஏற்றிச் சென்ற 5சாரதிகள் அடங்குவர்,

கடந்த 2வாரங்களில் நாடு பூராக ஏற்பட்ட வாகன விபத்துக்களில் 18பேர் உயிரிழந்ததாகவும் பொலிஸார்மேலும் தெரிவித்துள்ளனர். (உ-9)

## சி. வை. தா. நினைவுக் கட்டுரைப்போட்டிமுடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்ச்சங்கத்தினால் சிறுப்பிட்டி சி. வை. தாமோதரம்பிள்ளை நினைவாக பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அதன் விபரம் வருமாறு:

- ஆரம்பப் பிரிவு

முதலாமிடம் வ.ஹோகிலா யா. யோன்பொஸ்கோ, இரண்டாம் இடம் லோ.தர்சிகன் யா. கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், மூன்றாம் இடம் ந. தார்மீகன் யா. பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம்.

- கீழ்ப் பிரிவு

முதலாம் இடம் சி. ஜெயதீபன் யா. அச்சுவேலி மத்தியகல்லூரி, இரண்டாமிடம் வி. விஜயகுமாரி யா. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மூன்றாமஇடம் கி. பிரதீபன் யா. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

- மத்திய பிரிவு

முதலாம் இடம் பு. தேவரஞ்சனா யா. சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் ப. ஜனனி யா. மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், மூன்றாம் இடம் கி.விக்னேஸ்வரி யா. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

- மேற்பிரிவு

முதலாம் இடம் க. சுவர்ணா யா. மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், இரண்டாம்இடம் சோ. சுவர்ணஜா யா. திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம், மூன்றாம் இடம் வி. நாயினி யா. நயினாதீவு மகா வித்தியாலயம்.

இதேவேளை இக்கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ள தமிழ் விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர். (த)

## படித்த மகளிர் குடியேற்றத் திட்ட வீடுகள் தரைமட்டம்

(தென்மராட்சி)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் இருந்த வீடுகளில் சுமார் 85 சதவீதமான வீடுகள் அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப் பட்டுள்ளன.

அத்துடன், அங்கு 191 காணித் துண்டுகளில் இருந்த பனை, தென்னை, மா, பலா, வேம்பு போன்ற பயன் தரும் மரங்களும் அழிக்கப் பட்டு விட்டன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படித்த மகளிர்க்கென உருவாக்கப்பட்ட முதலாவது குடியேற்றத் திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

# பத்து மில்லியன் சம்பள மோசடி இராணுவப் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

இராணுவத்தில் பணியில் இல்லாதவர்களின் பெயர்களில், பத்து மில்லியன் வரையான பணம்சம்பளமாக வழங்கப்பட்ட மோசடி குறித்து இராணுவப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மூன்றுவருடங்களாக நடைபெற்று வந்துள்ள இந்த மோசடி பற்றி இராணுவத்தின் கொடுப்பனவுப் பிரிவு அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு வருவதாக இராணுவ பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நன்கு திட்டமிடப்பட்ட வகையில் நடைபெற்றுவந்த மேற்படி மோசடியில் இராணுவ விட்டோடிகளினதும், வெளியாரினதும் பெயர்களில் சம்பளப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக இராணுவத்தின் கொடுப்பனவுக் கிளையின் படை வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இதில் சம்பந்தப்பட்டிருந்ததாக சந்தேகிக்கப்படும் லெப்டினன்ட் ஒருவர் வெளிநாட்டிற்கு தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது. (உ)

## பளைப் பிரதேசம் பழைய நிலைக்கு திரும்புகிறது

(கல்வயல்)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளதையடுத்து பளை நகரப்பகுதி, சந்தை வீதிகள் என்பன துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன், தாங்கி மூலம் குடிநீர் விநியோகம், பாவனைக் கிணறுகளை இலவசமாகத் தூய்மை செய்தல் ஆகிய பணிகளும் இடம் பெற்று வருகின்றன. (உ-111)

# பொய்மையைக் கண்டு குமுறும் மன எழுச்சியை பிரதிபலிக்கும் "முதுசொமாக" சிறுகதை தொகுதி



சிறுகதைநூல்:-முதுசொமாக
ஆசிரியர் :-இ. இராஜேஸ்கண்ணண்
வெளியீடு:-தூண்டி
விலை :- விலை 110/=

பத்திரிகை,சிறுசஞ்சிகைகள் வாயிலாக ஏலவே படைப்புலகிற்கு அறிமுகமானவர் இராஜேஸ் கண்ணன். அவரது தேர்ந்தெடுத்த சிறுகதைகள் 'முதுசொமாக..' என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளன. 1992ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரை சஞ்சீவி, தினக்குரல் முதலான பத்திரிகைகளில் வெளியான கதைகளும் இத்தொகுதிக்காகவே எழுதப்பட்ட கதைகளுமாக பத்துக்கதைகள் இத்தொகுதியை அலங்கரிக்கின்றன. ராஜேஸ் வெளியிடும் முதல் சிறுகதைத் தொகுதி இதுவாகும்.

இத் தொகுதியில் உள்ள சிறுகதைகளை ஒருங்கே நோக்குகின்றபோது அவை ஒவ்வொன்றும் புதிய பல கோணங்களில் நகர்த்தப் படுவதைக் காணலாம். முதியோர் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், போர்ச்சூழல் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்ட வடுக்கள், சமூகத்தில் சாதி ரீதியாக ஏற்படும் முரண்நிலைகள், தலைமுறை இடைவெளிகள், முதலான சமூகத்தின் பல்வேறுபட்ட பிரச்சினைகள், சிக்கல்கள், முரண்நிலைகள் என்பவற்றை தன் கதைகளின் கருப்பொருளாக்கி இருக்கின்றார் ராஜேஸ். இதனால் குறுகிய வட்டம் ஒன்றுக்குள்ளேயே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் நிலையில் இருந்து ராஜேஸ் விலகி இருக்கின்றார் எனக் கூறலாம். அவரது சமூகப் பார்வையில் நிகழ்ந்துள்ள அகலிப்பையே இவை எடுத்துக் காட்டுகின்றன.

தன் சொந்த அனுபவமானதும் தான் முதற் சாட்சியாய் நிக்க நிகழ்ந்ததுமான விடயங்களையே இவர் கதையாகப் பின்னுகின்றார். சமூகத்தின் பொய்மைகளைக் கண்டு குமுறும் மன எழுச்சியே இக்கதைகளின் பிறப்பிற்குக் காரணம் என அவரே கூறுகின்றார். ''சமூகத்தில் பொய்மைகள், வேசங்கள், ஆதரவு அரவணைப்பின்மைகள் எனது மன எண்ணப்பாடுகளுடன் முட்டி மோதி மறுதலிக்கப் படும்போது மனம் தாக்கப்பட்டு 'எழுதடா' எனத் தூண்டும் பிரச்சினைகளை மற்றவர்கள் மனதிலே தைக்கும் வண்ணம் சொல்வதே என் சிறுகதைகள்'' என 'முதுசமாக..' சிறுகதைத் தொகுதி முன்னுரையில் அவர் குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

இத்தொகுதியில் உள்ள பத்துக் கதைகளையும் கூர்ந்து நோக்குகின்றபோது அவற்றில் மனித நேயமும் பண்பாட்டைப் பேண வேண்டும் என்ற மன விருப்பும், விஞ்சி நிற்பதைக் காணமுடிகின்றது. சமூகத்திலுள்ள எந்த ஒரு பிரச்சினையையும் அவர் மனித நேயத்துடனேயே அணுக முயல்கின்றார். முதியோர் சமூகத்தில் எதிர் நோக்கும் சிக்கலை சொல்ல வந்தால்என்ன, போராட்ட சூழலிற்கு முகம் கொடுககும் மனிதர்களது வாழ்வியலைக் கூற வந்தால் என்ன எங்கும் மனித நேயமே தலைதூக்கி நிற்பதைக் காண்கின்றோம். அந்த வகையில் எவ்வாறு ஈழகேசரி மறுமலர்ச்சிக் கால எழுத்தளர்கள் மனித நேயத்தைத் தமது கதைகளின் தளமாக்கினார்களோ அவ்வாறே இவரும் மனத நேயத்தைத் தன் கதைகளின் தளமாக்கியுள்ளமை தெரிகின்றது. ஆயினும் இவரது கதைகள் சமகாலத்தைத் கதைத் தளங்களாகக் கொண்டு புதிய கோணத்தில் விரிவதைக் காணலாம். இவர் பின்பற்றும் மனித நேயத்தளம் தொடர்ந்து அவரது படைப்புக்களிற்கு அல்லது அவரது வளர்ச்சிக்கு உறுதியான தளமாக அமையுமா? என்பது ஆய்வுக்குரியதாகும். ஆயினும், மனித நேயத்தளத்தில் நின்று எதனையும் கூர்ந்து உற்று நோக்கி ஆழமாக அனுபவித்து பக்கச் சார்பின்றி கதைகளைப் படைக்கும் பண்பு போற்றத்தக்கதாகவுள்ளது.

தலைமுறை இடைவெளிகளை இனங்காட்டும் அவரது கதைகள் தனித்து சுட்டப்பட வேண்டியவையாகும். மூன்று தலைமுறையினரை இக் கதைகளில் ராஜேஸ் இனங்காட்டுகின்றார். இந் நாட்டிலேயே பிறந்து, வாழ்ந்து, காலச் சூழ்நிலைகளினால் பிள்ளைகளை வெளிநாடு அனுப்பிவிட்டு அல்லது அவர்களோடு சென்று வாழ்ந்துவரும் முதிய பரம்பரையினர் ஒரு வகையினர். 'இந்த நாட்டிலே பிறந்தாலும் சந்தர்ப்ப வசத்தால் பிற நாடுகளில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட இளம் பரம்பரையினர் மற்றொரு வகையினர். இவர்களைவிட வேற்று நாட்டுச் சூழலிலேயே பிறந்து தம்மை அச்சூழலுக்கேற்றவாறு தம்மை இயைபுபடுத்திக் கொண்டு வளரும் தலைமுறையினர் இன்னொரு வகையினர். இவ் மூன்று தலைமுறையினருக்கும் இடையே உள்ள முரண்பாடுகள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், உணர்ச்சிச் சுழிப்புக்கள் பண்பாட்டைப் பேண வேண்டும் என்ற விருப்புக்கள் என்பவற்றைக் கதைகளில் அழகாகப் பதிவு செய்கிறார்.

போர்ச் சூழலுக்கு முகம் கொடுத்து வாழும் மக்களது வாழ்வியல் பற்றிய கதைகள் தனித்துவம் மிக்கவையாக உள்ளன. போர், போரின அனர்த்தம், அகதிவாழ்க்கை, சிதைந்து போன வாழ்க்கை என்பவற்றுக்கப்பால் போராட்ட சூழல் மக்கள் வாழ்வில் அல்லது அவர்களது மனத்தில் ஏற்படுத்தி விட்ட வடுக்களையே அவர் சித்தரிக்க முயல்கின்றார். ஆறறிவு படைத்த மனிதர்களே அன்றி ஐந்தறிவுள்ள விலங்கினங்களும் போர்ச் சூழலால் எத்தகைய பாதிப்புக்கு உள்ளாகின்றன என்பதையும் அக்கதைகள் கூற முயல்கின்றன. அந்தவகையில் மேற்படி கதைகள் ஆழமான, அகமனச் சித்திரங்காளாக அமைய வேண்டும். ஆனால், இவர் வெறும் காட்சிப் படிமங்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்குவதன் மூலம் மேற்படி உணர்வு நிலைகளைச் சித்தரிக்க முயல்வதைக் காணலாம்.

கதைப்பின்னலைப் பொறுத்த வரையில் மரபு வழிச் சிறுகதைக்கே உரிய பாணியையே ராஜேஸ் பின்பற்றுகின்றார். தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்ற அமைப்பின் கீழ் அவரது கதைகள் வளருகின்றன. பல கதைகளை நனவோடை உத்தியைக் கையாண்டு அவர் நகர்த்திச் செல்வதைக் காணலாம்.

தன் கதைகளிற்கேற்ற வகையில் சிக்கனமாகப் பத்திரங்களை இவர் அறிமுகப்படுத்துகின்றார். பாத்திரங்கள் தமக்கென வகுக்கப்பட்ட பாதையில் துடிப்புடன் இயங்குவதைக் காணலாம். பலகதைகளில் தானே முக்கிய பாத்திரமாக அறிமுகமாகின்றார். இத்தகைய அணுகு முறை அவர்கதைகளைப் புதிய பரிமாணத்திற்கு எட்டச் செயகின்றன. பாத்திரங்களை அறிமுகம் செய்யும் பாங்கு கூட இயல்பான தாக உள்ளது. சில பாத்திரங்கள் கதையில் இயங்கா நிலைப் பாத்திரங்களாக அமைந்து வருவதையும் காணலாம். 'முதுசமாக..' கதையில் வரும் 'தம்பி' காவோலைக்கதையில் வரும் 'சிங்களக் கந்தப்பு' போன்றோரை வகை மாதிரியாக எடுத்தாளலாம். ஆனால் இவரது சில பாத்திரங்கள் அளவுக்கு மீறி அதிக பிரசங்கம் செய்பவர்களாகவும் உள்ளனர். சமாதான நீதவான் கதையில் வரும் 'வீரசிங்கம்' போன்றோரை வகை மாதிரியாக எடுத்துக் காட்டலாம்.

ஈ.குமரன்
உதவி
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

சில இடங்களில் பாத்திரங்கள் உபதேசம் செய்யவும் தொடங்கிவிடுகின்றன. இப்போக்குச் சிறுகதை அமைப்பைச் சிறிது பாதிக்கவும் செய்கின்றது.

இத் தொகுதியில் உள்ள பத்துக் கதைகளையும் கால அடிப்படையில் நோக்குகின்ற போது அவற்றின் மொழிநடையில் ஒரு வளர்ச்சி நிலையை அவதானிக்க முடிகின்றது. ஆயினும் மொழிநடையில் இன்னும் இறுக்கம் மிக அவசியமாகும் யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழ் உரையாடலில் லாவகமாகக் கையாளப்படுகின்றது. ஆங்கிலப் பதங்கள் வழக்கிலே விரவி வருவனவற்றை அப்படியே கையாளுகின்றார். செக்பொயின், ஸ்ராண், சீற், ரெலிபோன் போன்றவற்றை உதாரணமாக எடுத்தாளலாம்.

கதைகளின் தலைப்புக்கள்,

## திறனாய்வு

கதைபொருளுடன் மிக நெருங்கிய தொடர்புடையனவாக உள்ளன. பல கதைகளின் தலைப்புக்கள் கதைகளிலுள்ள சொற்களை அப்படியே கொண்டனவாகக் காணப்படுகின்றன. நூல் அமைப்பில் அதிக கவனத்தை ராஜேஸ் பின்பற்றி இருக்கின்றார். அச்சுப்பிழைகள், மிக அவதானமாகக் களையப்பட்டுள்ளன. கதைகளில் வரும் கருத்தாளம் மிக்க தொடர்கள் கதைகளின் தொடக்கத்தில் கட்டமிடப்பட்டுக் காட்டப்படுவதானது கதைகளுக்குத் தனிக் கவர்ச்சியை பெற்றுத் தருகின்றது. ரமணியின் முகப்புச் சித்திரம் கதைத் தொகுப்பிற்கு மேலும் அழகுசேர்க்கின்றது.

மொத்தத்தில் வளருகின்ற எழுத்தாளர் வரிசையில் எதிர்காலத்திற் சிறந்த படைப்புக்களை தரவல்ல நம்பிக்கைக்குரிய எழுத்தாளராக ராஜேஸ் கண்ணனைக் காண்கின்றோம். அவரது சமூகப் பார்வையின் அகலிப்பும், கூர்மையும் எதிர்காலத்தின் காத்திரமான படைப்புக்களைத் தரும் ஆற்றலை இனங்காட்டுகின்றன. எனினும், சமூகப்பார்வையை அவர் மேலும் கூர்மையாக்க வேண்டி உள்ளது. கதையின் கருத்தளத்தில் கவனம் செலுத்தும் அதேவேளை அதன் கலை த்துவத்திலும் அவரின் ஆற்றல மேலும் விரிவடைய வேண்டும். எவ்வாறெனினும் அவரின் 'முதுசமாக..' தொகுதி வளருகின்ற எழுத்தளர் களுடைய ஆக்கங்களோடு ஒப்பிடுகின்ற போது கருத்தாளமும், கலைத்துவமும் கொண்டதாக விளங்குகின்றது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை

# பொருளாதாரத்தையும் பாரம்பரியத்தையும் பாதுகாத்திடும் பனைவளத்தைப் பேணுவோம்

சீரளிந்து போயுள்ள தாய்நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதாயின் காலங்காலமாக கட்டிக்காத்த பாரம்பரியமும், வரலாற்று ஆவணங்களும் பாதுகாப்பும் இயற்கையாகவே தொடர வேண்டியவை மனிதன் இயற்கைக்கு மாறாக மண்ணின் வளங்களை அழிக்கத் தொடங்கியதில் இருந்தே அவனது வாழ்வின் அடிச் சுவடுகளும் அழிவடையத் தொடங்கியன.

பனைதான் எமது மண்ணின் பூர்வீகப் பயிர், எமது பண்பாடு, உணர்வு, உறங்கல் என்பவற்றுக்கொல்லாம் ஆணி வேராக இருந்து கொண்டே இருக்கின்றது. ஒவ்வோரு விதையையும் நாட்டும்போதும் ஒவ்வோரு புதிய வரலாற்றுக்கும் வழிதிறக்கின்றோம். பூமியில் புதையாத எந்த விதையுமே முளைப்பதில்லை. பனை விதைகள் கற்பகங்களைத் தருகின்றவை. யாழ்ப்பாணம் என்று சொல்லும் பொழுதோ அல்லது தமிழன் என்று இனங்காட்டும் பொழுதோ கற்பகம் தான் நினைவுக்கு வரும்.

வரண்ட வாழ்விலும் தன்னை ஈடுபடுத்தி களைக்காது வாரி வழங்கிக்கொண்டே இருக்கும் ஒரு பயிர்பனை.

இது யாழ்ப்பாணத்து மண்ணுக்கொன்றே இறைவன் கொடுத்த பயிர் இழந்த பின்பே அருமை தெரிகின்றது. நாளுக்கு நாள் தேசிய சொத்தாகிய பனை வளம் அழிவுற்றே வருகின்றது. போராட்ட சூழல் காரணமாகவும், வீடுகள் குடியிருப்புக்கள் பதைகள் போன்றவற்றை நிர்மானிக்கவும் பல அழிக்கப்பட்டே வருகின்றன. இதைத் தடுத்து நிறுத்த எல்லோரும் ஒன்று பட்டே உழைக்கவேண்டும்.

### மரம் நாட்டல்

வீட்டுக்கொரு பனை நட நல்தொரு வழிவகுப்போம். சிலர் பனை பெருத்தால் பாதுகாப்பற்றதென கருதுகின்றார்கள். மற்ற மரங்களைப்போல் முதிர்வு நிலையில்தான் பயன்தரும் நிலை பனைக்கில்லை. வடலிகளாகவே பல பயன்பளைத் தருகின்றது சிறு வடலிகள் தரும் இலாபங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும். இது நீரற்ற நிலையிலும் வளருவதால் அதை வளர்த்தெடுப்பது சுலபமானது ஆகவே எல்லோரும் பனை விதைகளை நட வழிகாட்டுவோம்.

### பாதுகாப்பு

மனித வாழ்வில் முக்கியமானது பாதுகாப்பு. இன்று உடலுக்கும் பாதுகாப்பளிக்கக் கூடிய ஒரே மரம் பனைதான்.

கடந்த காலங்களில் வீட்டுக்கு வீடு காப்பரணாகக் கிடங் பாதுகாப்பான வாழ்விற்காகவே போராட்டம் நடக்கின்றது. ஒன்று உயிர் பாது காப்பு, மற்றது உடல் பாதுகாப் பு உயிருக்கும் குகளின் முகப்புக்களிலும், மண் மூட்டைகளின் அடிகளிலும் காத்துவைத்தது பனைதான். நாம் முன்னோர்கள் அவற்றைத் தேவையின்றித் தறிக்காமல் சேமித்துக்காத்து வைத்த படியால் தான் இன்று தேவைக்கொல்லாம் பனைகளைத் தறிக்கும் வாய்புக் கிடைத்தது. அன்றைய சேமிப்பே இன்றைய வாழ்வுக்கு வளமூட்டியது. ஆகவே எதிர்காலச் சந்ததியனருக்கு சேமிப்பு வைக்க வேண்டும் எனில் பனம் விதைகளை நடுவோம், இருக்கம் பனைகளை அழியவிடாது காப்போம். இதுவே நாளைய சந்ததிக்கு நாம் தரும் தேட்டம்.

### உற்பத்தியும் அபிவிருத்தியும்

ஒவ்வொரு ஊரிலும், பிரதேசங்களிலும் கிராமியக் குடிசைத் தொழில்கள் உண்டு. இது நாட்டுக்கு நாடு வேறுபடலாம். பனை வல்வேறு விதமான வடிவங்களான கிராமிய குடிசைக் கைத் தொழில் வளங்களை உருவாக்க வகை செய்கின்றது. பொது வாக இது எமது மண்ணில் பாரம்பரிய குடிசைக் கைத்தொழிலோடு பொரிய தொழில்களுக்கும் வித்திட்டுள்ளத அதைவிட பல பாரம்பரிய தொழில்களிலும் தன்னை

புவனேஸ்

புகுத்திக் கொள்கின்றது. தச்சுத் தொழில், உழவுத் தொழில், கட்டிட சிற்ப, வடிவமைப்புக்கள், கவின் கலைகள் எல்லாம் தனதாக்கும் நிலையில் உள்ளன. புதிய அன்னிய அடிச்சுவடுகள் காலஓட்டத்தில் பல சிரமங்களை உருவாக்கும்.

### இயற்கை வாழ்வு

விஞ்ஞானப் பொருட்களில் பொரும்பாலானவை இரசாயணச் சேர்க்கையில் உட்பட்டவை. ஆனால் பனம் பொருட்கள் இயற்கையானவையும், இயற்கையானவாழ்வை வழிப்படுத்த உதவுவனவுமாகும்.

எனவே பனை நாடுவோம், பனைவளர்ப்போம் என்ற உணர்வு பூர்வமான கருத்தை மக்கள் முன் வைப்பதற்கு முன்வருவோம்.

ஆங்கிலேய மக்கள் பழைமையை நேசிப்பவர்கள் புதிய பொருட்களை விட பழமையான பாரம்பரிய பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்குகின்றார்கள். அவர்களுடைய பழமை நேசமும், பாரம்பரியங்களுக்கு செலுத்தும் மரியாதைகளும் இன்று அகில உலகத்திற்கும் எடுத்துக் காட்டுகின்றது. பழைய சில பொருட்கள் ஏலத்தில் விடப்படும் பொழுது அதிக விலைகொடுத்து வாங்குகின்றார்கள் இதுபோன்ற உணர்வு எம்மவர் இடத்தில் உருவாவதில்லை. ஏன்,? நாம் எமது பழமையை எப்பொழுது மறக்கத் தொடங்கினோமோ அன்றிலிருந்தே எமது பூர்வீக அடையாளங்கள் தொலையத் தொடங்கி விட்டன. பூர்வக அடையாளங்கள் இல்லை எனில் ஓர் இனத்துக்கென தனித்துவமான அடையாளங்கள் அழியத் தொடங்கிவிடும் இவைகளைக்காக்கவேண்டும் எனில் எமது இயற்கையின் பூர்வீகத்தை முதலில் பேணவேண்டும்.

# இன்று ஒரு தகவல்

## சித்திகளால் சுகம் இல்லை

ஒரு சாமியார் இருந்தார். நிறையத் தவம் செய்திருக்கிறார். அதனால் அவருக்குப் பல சித்திகள் கிடைத்தன. சித்து வேலைகளை செய்ய ஆரம்பித்தார். இதனால் கொஞ்ச நாளில் அவருக்குத் தற்பெருமை வந்து விட்டது. அவர் உண்மையாகவே மிகவும் நல்லவர் தான், சாதுதான். நல்ல குணங்கள் அவரிடம் நிறைய இருந்தன. இருந்தாலும் தற்பெருமை அவரைவிட்டுப் போகவில்லை! இது ஆண்டவனுக்கே பொறுக்கவில்லை. யோசித்துப்பார்த்தார். இவருடைய தற்பெருமையைப் போக்குவதற்கு ஏதாவது செய்யவேண்டுமென்று முடிவு பண்ணினார்.

உடனே ஒரு சந்நியாசி கோலத்தில் அந்த சாது இருந்த இடத்துக்கு வந்தார். 'சுவாமி! நீங்கள் நிறைய சித்திகள் அடைந்திருக்கிறதாகக் கேள்விப்பட்டேன் அதுதான் உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்' என்றார். சாது உடனே தன்னைப் பார்க்கிறதற்காக வந்திருக்கிற அந்த சந்நியாசியை மிகவும் மரியாதையாகக் கூப்பிட்டு உட்கார வைத்தார். அந்தச் சமயம் பார்த்து அந்த வழியாக ஒரு யானை போய்க்கொண்டிருக்கிறது. சந்நியாசி அதைப் பார்த்தார். உடனே அந்தச் சாதுவிடம் 'சுவாமி! நீங்கள் நினைத்தால் இந்த யானையைக் கொல்ல முடியுமா?' என்று கேட்டார்.

'ஓ! செய்துவிடலாமே! அது என்ன பெரிய காரியம்' என்றார். ஒருபிடி மண்ணைக் கையில் எடுத்தார். ஏதோ முணுமுணு என்று சொல்லி மந்திரித்தார். பின்னர் அந்த மண்ணை யானைமேல் வீசினார். அவ்வளவுதான், உடனே அந்த யானை கீழே சுருண்டு விழுந்து செத்துப் போய் விட்டது. சந்நியாசி இதைப் பார்த்தார். 'ஆகா! எப்பேர்ப்பட்ட சக்தி உங்களுக்கு? அபாரம்! ஒரு பெரிய யானையைச் சுலபமாகக் கொன்று விட்டீர்களே!' என்று சொல்லி சாதுவை மிகவும் பாராட்டினார். இந்தப் பாராட்டைக் கேட்டவுடனே அந்தச் சாதுவுக்குத் தலைகால் புரியவில்லை. மிகவும் சந்தோஷப்பட்டார். பெருமை தாங்கவில்லை. இப்போது அந்தச் சந்நியாசி மறுபடியும் கேட்டார். நல்லது! இப்போது செத்துப் போன யானைக்கு மறுபடியும் உயிர் உண்டாக்க முடியுமா? என்றார்.

'ஓ! செய்து விடலாமே! அதுவும் ஒன்றும் பெரியகாரியமில்லை' என்று சொன்னார் சாது, இப்படிச் சொல்லி விட்டு மறுபடியும் ஒரு பிடி மண்ணைக் கையிலெடுத்தார். மந்திரித்தார். அந்த யானைமேல் வீசினார். அவ்வளவுதான். அந்த யானை அசைய ஆரம்பித்தது. மறுபடியும் எழுந்து நின்றது. இப்போது அந்த சந்நியாசி கேட்டார். சுவாமி! உங்களிடம் இருக்கிற சக்தி உண்மையிலே மிகவும் பெரிதுதான் அதிற் கொஞ்சம் கூடச் சந்தேகமில்லை. ஆனால்... நான் உங்களிடம் ஒரு கேள்வியை மட்டும் கேட்பதற்கு ஆசைப்படுகிறேன்' என்றார். 'கேள்' என்றார் சாது.

'இப்போது நீங்கள் ஒரு யானையைக் கொன்றீர்கள். அதன்பின் அதற்கு உயிரைக் கொடுத்து எழுந்திருக்க வைத்தீர்கள். சரி! இருந்தாலும் இதனால் உங்களுக்குக் கிடைத்த நன்மை என்ன? அதன் மூலமாக உங்களுக்கு என்ன ஆன்மீக முன்னேற்றம் கிடைத்தது? ஆண்டவனிடம் போவதற்கு இது ஏதாவது உதவி செய்ததா? இதுதான் என் கேள்வி' என்றார் அந்த சந்நியாசி. சாது கண்ணைத் திறந்து பார்த்தார். எதிரில் அந்த சந்நியாசி இல்லை. மறைந்து விட்டார். இவர் அதன் பின்புதான் யோசிக்க ஆரம்பித்தார். அவருடைய தற்பெருமை அவரை விட்டு விலகிப் போய்விட்டது. சித்திகள் கடவுளைக் காட்டுவதில்லை என்பதைச் சொல்லுவதற்காக ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னகதை இது.

கல்லூரியில் படிக்கிறகாலத்தில் நாங்களும் சில சித்து வேலைகள் பண்ணியது உண்டு. ஆனால் அதற்குப் பெயர் மஜிக். ஆண்டுவிழா சமயத்தில் மஜிக் ஷோ நடத்துவதாக முடிவு பண்ணினோம். ஒரு சின்னப்பெட்டி அதற்கு இரண்டு பக்கமும் கதவு. நடுவிலே ஒரு தடுப்பு இருக்கும். ஒரு பக்கம் மண்ணை அள்ளிப் போட்டு. அடுத்த பக்கம் திறந்து சர்க்கரையாக அள்ளிக் கொடுப்போம். ஏனென்றால் ஏற்கனவே அதற்குள்ளே சர்க்கரையைப்போட்டு வைத்திருப்போம்.

இதில் அன்றைக்குச் சொக்கலேட் வாங்கி முன்னரே போட்டு வைத்து விட்டோம். காலையிலேயே ஒரு சிறு பையனைத் தயார் செய்து வைத்து விட்டோம், ''இதோ பாரப்பா... மேடையிலே.. உனக்கு என்ன வேண்டுமென்று கேட்போம், நீ எனக்கு சொக்கலேட் வேண்டுமென்று சொல்ல வேண்டும் என்று பயிற்சியெல்லாம் கொடுத்து வைத்திருந்தோம். மாலையில் மேடையில் மஜிக்ஷோ நடக்கிறது. மந்திரவாதி பையனைக் கூப்பிட்டார், பையன் வந்து நிற்கிறான், ''உனக்கு மிட்டாய் வேண்டுமா? லட்டு வேண்டுமா? அல்வா வேண்டுமா? என்று கேட்கிறார். பையன் விழிக்கிறான், உனக்கு என்ன வேண்டும் என்று கேட்போம் என்று தானே காலையில் சொன்னார்கள், ஆனால் இப்போது இப்படி அது வேண்டுமா? இது வேண்டுமா? என்கிறார்களே, என்று குழம்பி விட்டான். சரி எது வேண்டுமானாலும் கேட்கலாம், போலிருக்கிறது என்று நினைத்துக்கொண்டு, எனக்கு அல்வா வேண்டுமென்று கேட்டுவிட்டான். இது வரை அவன்விழித்துக் கொண்டிருந்தான். இப்போது மந்திரவாதி விழிக்க ஆரம்பித்து விட்டார். மெதுவாக அவனுக்கு மட்டும் காதில் விழுகிற மாதிரி ''சொக்கலேட் வேண்டுமென்று கேளடா என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொல்கிறார்.

இது எல்லோர் காதிலும் விழப்போக, உடனே திரையைப் போடுவது போல ஆய் விட்டது. திரையைப்போட்டவுடன் மந்திரவாதி வேஷத்தில் இருந்த மாணவன் அந்தப் பையனைத் துரத்தியிருக்கிறான். அவன் பெஞ்சுக்குள் புகுந்து தப்பித்து ஓடிப் போய் விட்டான்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் கதையில் சித்திகள் கடவுளைக் காட்டுவதில்லை என்று தெரிந்து கொண்டோம். எங்கள் கதையில் நாங்கள் செய்த சித்து வேலை எங்களையே எல்லாருக்கும் காட்டிக் கொடுத்து விட்டது, இது தான் வித்தியாசம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

---

தென்மராட்சி வயல் நிலங்களில் படை முகாம்கள்

# விதைப்புக் காலத்தை வீணே கழிக்கும் நிலையில் விவசாயிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் மொத்தமாகவுள்ள 4ஆயிரத்து 383 ஹெக்டேயர் நெற் செய்கைநிலத்தில்2002-2003 பெரும் போகத்தில் சுமார் ஆயிரத்து 391 ஹெக்டேயர் நிலத்தில் மட்டுமே நெற் செய்கை செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

மீதியான 2 ஆயிரத்து 992 ஹெக்டேயர் நிலத்தில் இவ்வருடம் நெற் செய்கை செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளதால், மறவன்புலவு, தனங்கிளப்பு, சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு, மேற்கு, மட்டுவில், கல்வயல், மீசாலை வடக்கு பகுதி நெற் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வயல் நிலப்பகுதியில் இராணுவம் தனது படை முகாம்களை விஸ்தரித்து இருப்பதால் நெற் செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

இது பற்றி இப்பகுதி விவசாயிகள் தென்மராட்சி பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ள போதிலும் கூட நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படவில்லை.

இது இவ்வாறிருக்க தென்மராட்சி பிரதேச விவசாயிகள் விதை நெல் பெறுவதிலும் சிக்கல்களை எதிர் கொண்டுள்ளனர்.

(உ-77)

---

மாவட்ட மட்ட

## போட்டிக்குத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலய மட்டத்தில் இடம் பெற்ற சிறுவர் அரங்கப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்று, மாவட்ட மட்ட சிறுவர் அரங்கப் போட்டிக்கு யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம் தெரிவாகியுள்ளது. (உ-19)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கோப்பாய்ப் பிரிவினரால் நடத்தப்பட்ட பத்திரிகைப் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் யூலை மாதம் 7 ஆம் திகதி கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## பயணிகள் அதிருப்தி

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கும் - குறிகட்டுவானுக்கும் இடையிலான பயணிகள் சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகுச் சேவை அடிக்கடி நிறுத்தப்படுவது குறித்து பயணிகள் அதிருப்திவெளியிட்டுள்ளனர்.

(உ-250)

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

எம்.டி.குணசேனவின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் யூலை மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வை யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

பிரதமவிருந்தினராகதமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்இளம்பரிதியும், மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ரி.கமலநாதன்ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை இப் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இடம் பெறவுள்ளது. (உ)

---

## பல்கலைக்கழகங்களின் நிதிச் செயற்பாடுகளை கணனி மயப்படுத்த திட்டம்

(கொழும்பு)

நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களினதும் 'நிதிச் செயற்பாடுகள் கணனிமயப் படுத்தப்படவுள்ளதாக மூன்றாம் நிலைக் கல்வியமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பல்கலைக் கழககங்களின் நிதித்துறைசார் அதிகாரிகளை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் நிதிசார் செயற்பாடுகள் தனித்தனியே கணனி மயப்படுத்தப்படவுள்ளதுடன் வலையமைப்பிலும் இணைக்கப்படவுள்ளது.

இதில்பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அடங்கும்.

இத்திட்டம் மூலம் பல்கலைக்கழக உத்தியோகஸ்தர்களின் செயல் திறனை மேம்படுத்துவதுடன் சிறந்த நிதி முகாமைத்துவம் பற்றி பல்கலைக்கழக உத்தியோகஸ்தர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதன்முதல் கட்ட நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## தொண்டமானாறு உவர்நீர் தடுப்புக் கதவுகள் திருத்தும்பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாற்றினுள் உவர்நீர் உட்புகாமல் அமைக்கப்பட்ட கதவுகளைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி கதவுகள் இரும்பினால் அமைக்கப்பட்ட காரணத்தினால்காலகதியில்அவை துருப்பிடித்துப் பழுதடைந்துள்ளன.

இதனால்,உவர் நீர் உட்புகும் ஏது நிலைஏற்பட்டுள்ளதுடன்,

இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் பணிகளை மேற்கொள்ள கடந்த 2000 ஆம் ஆண்டில் நான் அமைப்பு 18 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தது.

இந் நிதியினைக்கொண்டே கொலன்னாவை அரசாங்கத் தொழிற்சாலை இப்பணிகளை மேற்கொள்ளவுள்ளதுடன், நிறுவனப் பணியாளர்கள் நேரில் பார்வையிட்டு பூர்வாங்கப் பணிகளையும் ஆரம்பித்துள்ளனர்.

எனினும் இப் பணிகளை மேற்கொள்ள 55மில்லியன் ரூபா தேவையெனமதிப்பிடப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ)

## உணவுச் சாலைகளில் திடீர் பரிசோதனை

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மானிப்பாய் பொதுச் சுகாதார பரிசோதகர் பகுதிக்குள் உள்ளடங்கும் உணவுச் சாலைகள் அனைத்தும்நேற்று முன் தினம் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டன.

பதில் மேற்பார்வையாளர் ந.வருணநாதன் தலைமையில் சென்ற குழுவினரின் இந்த திடீர் பரிசோதனையின் போது,சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறிய உணவுச்சாலைகள் சில இனம் காணப்பட்டதுடன், அதன் உரிமையாளர்களும் எச்சரிக்கப்பட்டனர்.

(உ-232)

வீதிக் கண்காணிப்பு பொலிஸார்

## விதிகளை மீறுவோர் விடயத்தில் பாராமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் கடமையில் ஈடுபடும் வீதிக்கண்காணிப்புப் பொலிஸார் போக்குவரத்து விதிகளைமீறுவோர் விடயத்தில் அதிகஅக்கறை காட்டுவதில்லைஎனபலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தலைக்கவசம் அணியாத மோட்டார் சாரதிகள்மற்றும் அனுமதிப் பத்திரங்கள் பெறாத வாகனங்களைக் கண்டு பிடித்துதண்டப்பணம் அறவிடுவதிலேயே இவர்கள் குறியாக இருப்பதாகவும்,

வரிசையாக சைக்கிளில் செல்வோர், ஒருவழிப்பாதை நடைமுறையினை மீறுவோர் சந்திகளில் வாகனங்களை நிறுத்துவோர் விடயத்தில் பாராமுகமாகச் செயற்படுவதாகவும்,

இதனால்வீதிவிபத்துக்களை குறைக்கும் முயற்சிவீணாகி வருவதாகவும் மக்கள்மேலும் தெரிவித்து வருகின்றனர்.

(உ-111)

## பாடசாலைகளை தனியார் மயப்படுத்தும் திட்டம் எதுவும் கிடையாது

### மறுக்கிறார் அமைச்சர் கொடித்துவக்கு

(கொழும்பு)

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களூடாக, பொதுமக்களில் பலர் பங்கு பற்றும்பாடசாலை நிர்வாக முறை ஏற்படுத்தப்படவிருப்பது பாடசாலைகளைத் தனியார்மயப்படுத்துவதற்கான ஒருநடவடிக்கையென்றுகூறப்படுவதை கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மறுத்துள்ளார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலைநலன் விரும்பிகள் ஆகியோரைக் கொண்டிருக்கும் என்று தெரிவித்த அமைச்சர்இச் சங்கங்கள் பாடசாலை மூலம் சிறந்த சேவைகளைச் செய்வதோடு மோசடிகளை கட்டுப்படுத்தும் அமைப்பாகவும் இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இச்சங்கங்களே பாடசாலையின் அன்றாட நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவை. அத்துடன் கல்வி அமைச்சிற்கும், மாகாணகல்வி அதிகாரிகளிற்கும், பாடசாலையின் நடவடிக்கைகள் பற்றிய அனைத்திற்கும் பொறுப்பானவை.

அத்துடன் இச்சங்கங்கள் பாராளுமன்ற சட்டங்களால் சட்டரீதியாக்கப்படும்என்றும் அரசாங்க ஆதரவும் வழங்கப்படும் என்றும் கூறினார்.

(உ)

## விடுதலைப் புலிகள் மீது விதித்த தடையை ஆஸி.அரசு நீக்கவேண்டும்

### அந்நாட்டு பிரதமருக்கு விநாயகமூர்த்தி எம். பி. கடிதம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், அதற்கான நியாயங்களை விளக்கியும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவுஸ்திரேலியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதரகம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள அக் கடிதத்தில்,

விடுதலைப் புலிகள் மீது உங்கள் அரசு விதித்துள்ள தடையை நீக்குவது பற்றி நீங்கள் ஆலோசிப்பதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

2002 பெப்ரவரி 22 ஆம் திகதி இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் நிரந்தர யுத்த நிறுத்தத்துக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, இரு தரப்பும் வெகு விரைவில் பேச்சுக்களை நடத்தவும் உத்தேசித்துள்ளன.

சர்வதேச சமூகமும், இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைமூலம் தீர்வுகாணும்படி அரசுக்கும் புலிகளுக்கும் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

இந்த நிலையில், உங்கள் அரசாங்கம், விடுதலைப் புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்குவது இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் என உணர்கிறோம்.

1983 ஆம் ஆண்டு தமிழர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டு திட்டமிடப்பட்ட இனவன் செயல்கள் இடம் பெற்ற வேளையில் எந்த வெளிநாடும் தமிழர்களைக் காப்பாற்ற வரவில்லை.

விடுதலைப் புலிகள், தங்கள் பாதுகாப்புக்கும், தமிழ் மக்களது விடுதலைக்காகவும் ஆயுதம்ஏந்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## இ. செ. ச. ஏற்பாட்டில் எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஏற்பாட்டில், யாழ். மாவட்ட ரீதியில் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மற்றும் பொது மக்கள் மட்டத்தில் இக் கருத்தரங்குகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

இதேவேளை இத்தகைய கருத்தரங்குகளை நடத்துவதற்கு முன்னோடியாக ஒவ்வோர் மாவட்டத்தில் இருந்தும் இருவர் தெரிவு செய்யப்பட்டு, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்தால் கொக்கலையில் 3 நாள் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ)

## இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக் கிளை யூலை முதல் கணனிமயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி-யாழ்.மேற்தரக் கிளையின் வங்கிச் சேவைகள் எதிர் வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் கணனிமயமாக்கப்படவுள்ளன.

இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஜானக போகொல்லாகம வைபவரீதியாக காலை 9.00 மணிக்கு இந் நிகழ்வினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இலங்கை வங்கியின் கிளைகளுக்கும் அபிவிருத்திக்கும் பொறுப்பான ரி எஸ்.ரணசிங்கவும், வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திருமதி க.துரைராஜாவும் இந் நிகழ்ச்சியில் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## கண்டனம்

(தென்மராட்சி)

மூதூரில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களின் போது சுயாதீன பத்திரிகையாளரான சற்சிவானந்தன் தாக்கப்பட்டமை குறித்தும்அவரது இருப்பிடம் சேதமாக்கப்பட்டமை குறித்தும்,வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஆழ்ந்த கவலையும் கண்டனமும்தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர்தமதுபணிகளைச் செய்யும் போது தாக்கப்படுவதும் அதனைத் தொடர்ந்து அவரதுவீடு தாக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டமையும் மனித உரிமைகளை மீறும் செயல்களாகும்.

இச்சம்பவங்கள்குறித்து நீதியான விசாரணை ஒன்றினை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என பத்திரிகையாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-77)

## பாசையூர் சென் அன்ரனீஸ் அணி சம்பியனானது

(சுண்டுக்குளி)

1986 ஆம் ஆண்டு மண்டைதீவு கடலில் வைத்து இராணுவத்தினரால் கொல்லப்பட்ட 31மீனவர்களின்ஞாபகார்த்தமாக வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் தூய ஒளி உதைபந்தாட்ட போட்டி, இவ்வருடமும் சென் ஜேம்ஸ் விளையாட்டு மைதானத்தில் பாடும் மீன் விளையாட்டுகழக தலைவர் எஸ். யேசுதாசன் தலைமையில் நடைபெற்றது.

இப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு விழாவும் கடந்த செவ்வாய்ககிழமை நடைபெற்றபோது முதலில் நடைபெற்ற 3 ஆம் இடத்துக்கான தெரிவு ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து சென்றோக் அணி ஆடியது.

இரு அணிகளும் கொடுக்கப்பட்ட நேரத்தில் கோல் எதையும் போடாமையினால் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக 05 மேலதிக உதைகள் இரு அணிகளுக்கும் கொடுக்கப்பட்டபோது 4:2 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வென்று 3 ஆம் இடத்தைத் தனதாக்கி கொண்டது.

இவ் ஆட்டத்துக்கு மத்தியஸ்தர்களாக எம். பிரான்சிஸ். கே. முத்துலிங்கம், சி. ஏ. அரவிந்தன் ஆகியோர் கடமையாற்றினர்.

அதனை தொடர்ந்து இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில் பாசையூர் சென் அன்ரனீஸ் அணி அதனை எதிர்த்து ஆடிய நாவாந்துறை சென் நீக்கிலஸ் அணியை 2:0என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனானது.

இவ் இரு கோல்களில் ஒன்றை விவியன் பிக்லஸ்சும், மற்றையதை ரி. சூரியும் தம் அணிக்கு பெற்றுக் கொடுத்தனர்.

இவ் ஆட்டத்துக்கு மத்தியஸ்தர்களாக ரி. நித்திலநாயகம், சி. ஏ. அரவிந்தன், கே. முத்துலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

(உ-110)

## கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் யாழ்ப்பாண வருகை

(யாழ்ப்பாணம்)

கமநலஅபிவிருத்தித்திணைக்களத்தின் ஆணையாளர் எஸ். புஸ்ஸப்பிட்டிய மேலதிகஆணையாளர் மில்ரன்வீரசிங்க பிரதி ஆணையாளர் கே. கைக்குவத்தர ஆகியோர் அடங்கிய குழுவினர் யாழ். குடாநாட்டிற்கு உத்தியோக பூர்வவிஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் கமநல சேவைத் திணைக்கள நடவடிக்கைகள், கமநல சேவை நிலையங்களின் செயற்பாடுகள் என்பனவற்றை விரிவாகஆராயவுள்ளனர். (உ-19)

## சர்வதேசமன்னிப்புச்சபைக் குழுவினர் இன்று ஜனாதிபதியை சந்திப்பர்

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச் சபைக் குழுவினர் இன்று ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர்.

லண்டனிலிருந்து இயங்கும் இம் மனிதவுரிமை இயக்கத்தைச் சந்திக்கும் விருப்பில் தனக்கு நேரமில்லாத நிலையிலும் ஜனாதிபதி சந்திரிக்கா இவர்களைச் சந்திக்க ஒப்புக்கொண்டுள்ளதாக அவரின் ஊடகப் பேச்சாளர் ஹரி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களை இயக்கத்தில் சேர்க்கும் புலிகளின் விவகாரம் பற்றி இதில் பேசப்படும் எனவும் இது ஐக்கிய நாடுகள் விசேட மாநாட்டிலும் ஜனாதிபதி கடந்த மாதம் வலியுறுத்திய விடயம் எனவும் ஹரி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்களில் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் வெளி விவகார ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமரும் கலந்து கொள்ளவுள்ளார்.

கடந்த வாரம் இக்குழு புலிகளின் அரசியற் பொறுப்பாளர் சு ப. தமிழ்ச்செல்வனை சந்தித்திருந்தமை தெரிந்ததே.

கடந்த ஞாயிறன்று இலங்கை வந்த இக்குழு எதிர்வரும் 30 ஆம் திகதி திரும்புவதற்கிடையில்அரசின் வேறு பல முக்கியஸ்தர்களையும் சந்திக்கவுள்ளதாக தெரியவருகிறது. (உ)

## சிங்களத்திலும் பெயர்ப் பலகை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில், கச்சேரி மற்றும் மக்கள் வங்கி உட்பட நிறுவனங்கள் பலவற்றிலும் பெயர்ப் பலகைகள் சிங்களத்திலும் எழுதப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

(உ)

## இந்திய விமான சேவையை விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இந்தியாவிற்கான விமான சேவைகளை விஸ்தரிக்க ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் நிறுவனம் அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டுவருகிறது.

கொழும்பிலிருந்து பெங்களூருக்கும், புத்தகயாவுக்கும் இடையே விமானப் போக்குவரத்துக்களை நடத்துவது தொடர்பாக ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் தற்போது புதுடில்லி, மும்பை, திருவனந்தபுரம், திருச்சி ஆகியவற்றுக்கிடையே விமான சேவைகளை நடத்திவருகிறது.

(உ-8)

## புதிய கட்டடம்

(கல்வயல்)

மருதனார்மடம் சந்தையில் நிலவும் இடநெருக்கடியைப் போக்கும் வகையில்,வலிதெற்குப் பிரதேச சபையினால் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

(உ-111)

## குறைந்த கட்டணத்தில் வாடகை வாகனச் சேவை

### உள்ளூர் உரிமையாளர் ஏமாற்றம்

(வட்டுக்கோட்டை)

தென்பகுதியில் இருந்துதேவையின் நிமித்தம் யாழ்ப்பாணம் வரும்வாகனங்கள் இங்குவாடகைச் சேவையில்ஈடுபடுவதால் உள்ளூர் வாடகை வாகனக் காரர்கள்பெரும்பாதிப்பினை எதிர்கொண்டு வருகின்றனர்.

தென்பகுதி வாகன உரிமையாளர்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டதிலும் பார்க்க குறைந்த பணத்தைப் பெறுவதால் பொதுமக்கள் அவர்களையே நாடிவருவதாகவும் தெரியவருகிறது. (உ-216)

## சீன அரசிடம் பெற்ற கடனை மீளச் செலுத்த மார்க்கமில்லை

சீன நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் மற்றும் போர்ப்படகுகளுக்கான ஆயிரத்து 952 கோடி ரூபா கடனை கடந்த அரசாங்கம் செலுத்தாததால் அக்கடனை தற்போதைய அரசாங்கம் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

இக் கடன் தொகையை தற்போதைய அரசாங்கம் செலுத்துவதற்கான நிதி நிலைமை இல்லாமையினால், அந்நிறுவனத்திற்கான கடன் தொகையை சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கவுள்ள கடனின் ஒருபகுதி மூலம் தீர்க்க இலங்கை அரசு எண்ணியுள்ளது.

எனினும், இதுகுறித்து சீன அரசிடம் பேசிய போது குறித்த நிறுவனம் தொடர்பான விடயத்தில் தாம் தலையீடு செய்ய முடியாதென சீன அரசு தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (உ-3)

# நேற்று இடம் பெற்ற கண்டனப் பேரணியின் காட்சிகள் சில...







படங்கள்:-
திருநீபன், துஷ்யந்தன்

















# சமாதான முன் நடவடிக்கைகளை முறியடிக்கும் முயற்சியில் அந்நிய சக்திகளும் சம்பந்தம்?

## புதிய ஜனநாயகக்கட்சி சந்தேகம்

(கொழும்பு)

முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளை முறியடித்து மீண்டும் யுத்த சூழலை உருவாக்கி அதன் மூலம் பேரினவாத நோக்கங்களைநிலைநாட்டவும் அதற்கு உதவுவதன்மூலம் தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் தீய சக்திகள் திட்டமிட்டு செயலாற்றி வருகின்றன.

இதன் அடிப்படையிலேயே யாழ். குடாநாட்டில் வேலணைப் பிரதேசத்திலும் கிழக்கில் மூதூரிலும் விடுதலைப் புலி முக்கியஸ்தர்களும் அவர்களது காரியாலயமும் தாக்கப்பட்டிருக்கிறது. இச்சம்பவங்கள் சமாதானத்திற்கு எதிரான திட்டமிட்ட சதிச் செயல்கள் என்றே கொள்ள வேண்டியுள்ளன. இத்தகைய தாக்குதல்களை எமது புதிய ஜனநாயக கட்சிமிக வன்மையாகக் கண்டிக்கிறது.

புதிய ஜனநாயகக்கட்சியின் மத்தியகுழு சார்பாக பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், கடந்த இருபது வருடங்களாக யுத்தத்தின் மூலம் தமது பேரினவாத நிலைப்பாட்டை வலுப்படுத்திவந்த சக்திகளும் பொருளாதார தேட்டங்களைத் தேடியவர்களும் அரசியல் லாபங்களை அடைந்தவர்களும் தற்போதைய சமாதான சூழலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகையவர்களின் நோக்கங்களை அடைவதற்கே யுத்த சூழல் மீண்டும் தேவைப்படுகின்றது. எனவேதான், ஆயுதப்படைகளில் உள்ள ஒரு பிரிவினரைப் பயன்படுத்தியும், சில தீய நோக்கம் கொண்ட குழுக்களை, தனிநபர்களை ஏவிவிட்டும் சமாதான முன் முயற்சிகளை முறியடிக்க முற்பட்டுள்ளனர்.

இந்த முயற்சியில் அயலகத்தும் அந்நிய சக்திகளினதும் கரங்கள் சம்பந்தப்பட்டிருக்குமோ என்ற அச்சமும் உருவாகியுள்ளது.

ஆதலால், சமாதானத்தையும் அரசியல் தீர்வையும் ஆதரித்துநிற்கும் அனைத்து அரசியல் சக்திகளும் விழிப்புடன்இருந்து சமாதான சூழலைப் பாதுகாக்கவும் பேச்சுவார்த்தை இடம்பெறவும் வற்புறுத்தல்களை வெகுஜன இயக்கங்கள்மூலம் முன்னெடுக்க வேண்டும். எமது புதிய ஜனநாயகக்கட்சி அதற்கான பங்களிப்பை தொடர்ந்து வழங்கிவரும் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

உசன்பகுதியில்இடம்பெற்ற வான்-மாட்டுவண்டில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர்படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செ. கந்தசாமி(வயது53) என்பவரே படுகாயமடைந்தவராவார். (த)

## ஒலி,ஒளிபரப்பு உரிமை

(கொழும்பு)

இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ள ஆசிய நாடுகளின் 14-வது மெய்வல்லுநர் போட்டிகளை ஒலிபரப்புச் செய்வதற்கென இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஒளிபரப்பு உரிமைகளையும், லேக் ஹவுஸ் நிறுவனம் அச்சிட்டு உரிமைகளையும் பெற்றுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (உ-8)

# தாய்லாந்துப் பேச்சுக்களில் கைதிகள் விடுதலை விவகாரம்

## கவனத்தில் கொள்ளக் கோரிக்கை

(கொழும்பு)

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுக்களின்போது அரசியல் கைதிகள் பரிமாற்ற விடயத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

பணியின்போது காணாமற்போன படைவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர் சங்கத்தின் தலைவர் ஈ. பி. நாணயக்கார மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பில் அரசு, விடுதலைப்புலிகள், நோர்வே ஆகிய முத்தரப்புகளுக்கு கடிதங்களையும் அனுப்பி வைத்துள்ளார்.

பரஸ்பர நம்பிக்கையையும் இரு இன மக்களிடையே புரிந்துணர்வையும் வளர்க்க இந்தப் பரிமாற்றம் உதவும்.

தென்னிலங்கையின் சிறைகளில்வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, விடுதலைப்புலிகள் தமது பராமரிப்பில் வைத்திருக்கும் படைத்தரப்புக் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டுமென அக்கடிதத்தில் மேலும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, புலிகளின் காவலிலுள்ள அரசியல் கைதிகளை சமாதான நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யுமாறு அரசாங்கம் விடுதலைப்புலிகளிடம் கோரியிருப்பதாகவும்,

இதுகுறித்து ஆராய்ந்து சாதகமான முடிவை அறிவிப்பதாக புலிகள் தரப்பு தெரிவிப்பதாகவும் சமாதான செயலக செயலாளர் நாயகம் பேர்னாட் குணதிலக தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# சங்கே முழங்கு

## நெடுந்தீவுக் கடலில் பயணிகளின் அவலம்

கடந்த 23 06.2002 அன்று நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தேர்த்திரு விழாவில் கலந்து கொள்ளச் சென்ற 38பக்தர்களுடன் நயினாதீவில் இருந்துமாலை 5.45மணிக்கு புறப்பட்ட 'சமுத்திரதேவா' என்னும் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான படகின் இயந்திரப் பகுதியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நயினாதீவுக்கு சற்று தொலைவில் மிகுந்த கடற்கொந்தளிப்புப் பிரதேசமாக காணப்படக்கூடிய 'மலையடி' என்னும் பிரதேசத்தில் படகு நின்றுவிட்டது. அன்று வழமையான நாட்களை விடக் கடல் கொந்தளிப்பு அதிகமாக இருந்தது.

இந்நிலையில் படகை நங்கூரம் இட்டுநிறுத்துவதில்படகு சிப்பந்திகட்கு போதும் போதும் என்று ஆகிவிட்டது. இதற்காக 15நிமிடங்கள வரை சென்றது. இதனை தொடர்ந்து இயந்திர திருத்தத்துக்கு இவர்கள் முயற்சிசெய்துகொண்டு இருக்கும் வேளையில் படகு ஓடாத நிலையில்பாரியஅலைகளினால் அலைக்கழிக்கப்பட்டது. இதனால் மக்கள் பீதி அடைந்து அச்சத்தின்உச்சஎல்லைக்கே சென்றனர். இதன் வெளிப்பாடாக அழுகையும் கூக்குரலும் பெருகியது.

இந்நிலையில் நெடுந்தீவில் இருந்து நயினாதீவை நோக்கிக் 'குமுதினிப்' படகுமுன்னால் வந்துகொண்டு இருந்தது. அதைக் கண்டதும் இதில் இருந்த எமக்கு நிம்மதிப்பெருமூச்சுகிளம்பியது. இதன் வெளிப்பாடாக நாம் படகின் மேல் பகுதிகளில் ஏறி நின்று வெள்ளை கொடிகளைக் காட்டியும் கையை அசைத்தும் சைகைகளைக் காட்டினோம். இது இப்படி இருக்க அந்த குமுதினிப்படகில் வேலை செய்யும் சிப்பந்திகள் மூவரும், வேறு சிலரும் நின்று பார்ப்பது எமக்கு மிகவும் தெளிவாகத் தெரிந்தது. இந்நிலையில் அந்த குமுதினிப்படகு எம்மை நோக்கி வராது போனது மாத்திரம் அல்லாமல் எமக்கு என்ன பிரச்சினை என்று கைச் சைகை கூட காட்டவில்லை.

இந்நிலையினை அவதானித்த எமது படகில் இருந்த மக்கள் அந்தச் செயலைக் கடுமையாக விமர்சித்ததை காணக்கூடியதாக இருந்தது. குமுதினிப்பட கோட்டிகளின் இந்தச் செயல் ஒருமனிதாபிமானம்அற்ற செயல் என்று அச்சத்தின் மத்தியிலும் சாடினார். இது 38 பயணிகளின் உயிர் போகும் நிலை வந்து இருந்தால் கூட ஆச்சரியப் படுவதற்கு இல்லை என்பதோடு மனிதாபிமானம் அற்ற செயல் என்றும் சொல்லலாம். இப்படியான செயல் இனிமேல் தொடராமல் பார்க்க வேண்டும் என்பது எனது தாழ்மையானதும் உருக்கமானதுமான வேண்டுகோள். அத்தோடு சமுத்திர தேவாபட கோட்டிகள் மிகவும் கடும் பிரயத்தன முயற்சி எடுத்து ஒரு வழியாக இயந்திரத்தை சீர்செய்து மிகுந்த சிரமத்தின் மத்தியில் இரவு 7.45 மணியளவில் எம்மை நெடுந்தீவுக் கரை சேர்த்தனர்

குறிப்பு:- உயிர்காப்பு கலங்களை தனியார் படகுகளிலும் கொண்டு செல்ல வலியுறுத்தவும்.

கே- ராசன்
நெடுந்தீவு

# காணி உறுதிகளில் புதிய மாற்றங்கள்

(கொழும்பு)

காணி மோசடிகளைத் தவிர்ப்பதற்காக காணி உறுதிகளில் புதிய மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இவை, அவுஸ்ரேலியா அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளின் மேற்கொள்ளப்பட்டு வருவது போன்று அமையும் என்றும், இப் புதிய நடவடிக்கைகள் முழுமையாக கணனிமயப்படுத்தப்படவுள்ளதாகவும் காணி அமைச்சர் கலாநிதி ராஜித சேனரட்ண தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற காணி உறுதி தொடர்பானஅறிவூட்டல் கருத்தரங்கில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

காணிச் சொந்தக்காரர்கள் தற்போது வைத்திருக்கும் உறுதிகளுக்கு அரசாங்கம் **(Land Tittle Report)** என்றழைக்கப்படும் காணி உறுதிக்குச் சமமான சான்றிதழ் அல்லது அத்தாட்சிப்பத்திரம் ஒன்று வழங்கப்படுவதோடு அக் காணிக்கான இலக்கமும் வழங்கப்படும்.

இம்முறையினால் காணி மோசடிகள் தவிர்க்கப்படுவதோடு காணி வழக்குகள் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் இவ் அத்தாட்சிப்பத்திர மூலம் காணி சொந்தக்காரர்கள் வங்கியில் கடன் பெற முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (உ-3)

## தூய வாழ்விற்குத்...

இசையோடு மறைகிறான்; இடையில் இறைவன் நாமத்தை இசைக்க மறுக்கிறான். நல்லதையே நினைத்து நல்லதையே கண்டு நல்லதையே கேட்டு, நல்லதையே செய்தால் நல்வாழ்வு கிடைக்கும். சந்தனமரத்தில் செய்த சிமிழ் மணப்பது இயற்கை, சந்தனத் தூள் போட்டு வைத்த தகரடப்பாவும் மணக்கும். சான்றோர் சேர்க்கையால் எளியோரும் பயனடைவார்கள். கல்வியைப் பயின்று ஒழுக்கத்தைக் கைவிட்டவன், நூலறுந்து வால் மட்டும் மிஞ்சிய பட்டம் போன்றவன். புடலங்காய்க்கு ஒரு சுமையைக் கட்டினால், வளையாது நீண்டு வளரும், மனிதனுக்கும் கடமையென்னும் சுமையைக் கட்டினால் வளையாது நேராக வாழ்வான். இல்லை என்பவன்இழிந்தவன் 'அவரை' விதையை விதைத்தால் அவரை முளைதான் வருமேதவிரவெண்டை முளை ஒருக்காலும் வராது. நாம் எவ்வினையைச் செய்தோமோ அவ்விளைவு தான் வருமே தவிர வேறு ஒன்றும் வராது. அடர்ந்த காட்டில் வசிப்பவன் ஐஸ்கிறீம் சாப்பிடுவதில்லை என்றால் வியப்பென்ன! கசாப்புக் கடைக்கருகில் இருப்பவன் கறி சாப்பிடாதிருந்தால் அது வியப்பு. இரந்துண்டு வாழ்பவனை விட 'இல்லை' என்று சொல்பவன் இழிந்தவன். முள்ளிலேயே பிறந்து முள்ளோடு மலர்ந்த பூவிற்கும் மணமுண்டு. பிறந்த இடம் எத்தகையதாயிருப்பினும், குணமுடையவராயிருத்தல் வேண்டும். பண்பற்ற மனிதர்கள் குறோட்டன்ஸ் செடிக்குத்தான் சமம். செருக்கற்ற செல்வந்தன் மறுவற்ற சந்திரனைப் போல ஒளிவிட்டு விளங்குவான்.

### கல்வியியற் கல்லூரிகளில் இருந்து

# வெளியேறிய ஆயிரத்து 992பேருக்கு நியமனம் வழங்கத் திறைசேரி அனுமதி

(கொழும்பு)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இருந்து வெளியேறியுள்ள 2 ஆயிரத்து 800பேரில் பட்டதாரிகளில் ஆயிரத்து 992 பேருக்கு நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கான ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கான அனுமதியை திறைசேரி தற்போது வழங்கியிருப்பதாக கல்வி, மனிதவள, கலாசார அமைச்சின் கல்விக் கல்லூரிகளின் ஆணையாளர் ஏ. சி. எம். இப்றாஹீம் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் நேர்முகப் பரீட்சை அந்தந்த மாகாண கல்வி அமைச்சினால் விரைவில் நடத்தப்படவுள்ளது.

தேசிய பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை மட்டும் மத்திய கல்வி அமைச்சினால் நடத்தப்படவுள்ளது.

நாடு முழுவதும் 9 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாகவும் வடக்கு, கிழக்கு, வடமேல், வடமத்திய மாகாணப் பாடசாலைகளில் ஆகக் கூடுதலான வெற்றிடங்கள் நிலவுவதாகவும் தெரியவந்துள்ளது. (உ-3)

தேறற்க யாரையும்தேராது
தேர்ந்த பின்
தேறுக தேறும் பொருள்.

குறள்

வலம்புரி

## குழம்பும் அரசியல்

நாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதனால் வெடிச் சத்தங்களுக்கு ஓய்வு கிடைத்துள்ளது உண்மையாயினும் நாட்டின் சிவில் நிர்வாகம் ஓர் கட்டுப்பாடற்ற தளம்பல் நிலையை அடைந்துள்ள உணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

மூதூரில் முஸ்லிம் மக்களிடையே எழுந்துள்ள தமிழ் மக்கள் மீதான எதிர்ப்பு உணர்வு மட்டக்களப்பில் ஏற்பட்டிருக்கும் பதற்ற சூழ்நிலையெல்லாவற்றையும் ஒப்பு நோக்கும் போது சிவில் நிர்வாகம் குலைந்துள்ளதைச் சுட்டி நிற்கிறது.

கடந்த இருபது வருடகால யுத்தத்தின் பக்க விளைவுகள் இப்போது வெளிப்படத் தொடங்கியுள்ளது. ஆரம்ப காலங்களிலேயே தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, தமிழ் மக்களும் சம உரிமையோடு இந்நாட்டில் வாழ்வதற்கு சிங்கள அரசுகள் வழி செய்திருந்தால் நாடே குழம்பிப் போகுமளவிலான சூழ்நிலைஏற்பட வாய்ப்பிருந்திருக்காது.

அவைதான் காலங் கடந்த ஆலோசனைகள் என விட்டு விட்டாலும் அரசு, விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிறைவேற்றி புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுவார்த்தை மேசையில் இனப்பிரச்சினை குறித்து ஆராய்ந்திருந்தால் கூட நாட்டின் தற்போதைய சூழ்நிலையை ஓரளவேனும் தணித்திருக்க முடியும்.


ஆனால் அதுவும் நடப்பதாக இல்லை. மாறாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்ட சமாதானசூழ்நிலையைப் பயன் படுத்தி இனவாத சக்திகள் தமிழ் - முஸ்லிம மக்களிடையே இனப் பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு குளிர்காய முனைவதே நடந்து கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முஸ்லிம் மக்கள் மீண்டும் மீளக் குடியமர இருக்கும் இச் சந்தர்ப்பத்தில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே மீண்டும்மலர இருக்கும் சகோதரத்துவத்திற்கு ஆப்பு வைக்கும் தீய சக்திகளின் முயற்சியை முறியடிக்க இரு இன மக்களும் முன்வர வேண்டும் என்பதோடு பொறுமையைக் கடைப் பிடிப்பதும் மிக மிக அவசியமாகும்.

# மேல் மருவத்தூர் ஆதிபராசக்தியின் அருளால்

# ஊழ்வினை அகற்றி உயர் வாழ்வு பெறுவோம்

## வெள்ளி நற்சிந்தனை



அனைத்துலகங்களையும் ஆட்சி செய்து வரும் அன்னை ஆதிபரா சக்தி தமிழ் நாட்டிலுள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் மேல் மருவத்தூர் என்னும் சிற்றூரில் கோயில் கொண்டு அருட்திரு பங்காரு அடிகள் மூலம் 'கல்கி' அவதாரங் கொண்டு ஆன்மீகத்தை வளர்த்து வருகின்றாள். பல அற்புதங்களைச் செய்து நாஸ்திகர்களையும் பல்வேறு சமயத்தவர்களையும் தன்பால் ஈர்த்து தானே எல்லாவற்றுக்கும் மூலம் என்பதை நிலைநாட்டிக்கொண்டிருக்கிறாள்.

பெண்களும் பூஜை

பிள்ளையார், சிவன், விஷ்ணு போன்ற அனைவரும் தன்னிலிருந்தே தோன்றினர் என்று கூறும் இவ்வன்னை ஆன்மீகத்தை வளர்ப்பதும், பெண் குலத்தை உயர்த்துவதும் இந்த அவதார நோக்கம் என்று கூறுகின்றாள். பெண்களைக் கருவறைக்குட் சென்று பூசை செய்யவும் பெரும் யாக பூசைகளைமுன்னின்று நடாத்தவும் அன்னை பணித்திருக்கின்றாள்.

இவ்வாலயத்தில் மந்திரங்கள் யாவும் தமிழிலேயே ஓதப்படுகின்றன. புரியாத மொழியிலே பிழையாக மந்திரங்களைச் சொல்வதால் பெரும் கேடுகள் விளைகின்றன என்பதனாலேயே தமிழில் மந்திரங்களைக் கொடுத்ததாகவும் தமிழ் மண் தாய்ப்பாசமுள்ள மண் என்பதனால் தமிழ்நாட்டில் அவதரித்ததாகவும், தமிழ் நாட்டிற்கு என்றும் அழிவில்லை என்றும் அன்னை கூறுகின்றாள்.

மக்களின் ஊழ்வினையை அகற்றி ஆன்மீகத்தில் முன்னேற்றம் பெறவேண்டிப் பல வழிபாட்டு முறைகளை அன்னை அருளிச் செய்திருக்கின்றாள். பலயாகங்களையும் ஆன்மீக மாநாடுகளையும் நடாத்தியிருக்கின்றாள்.

மழைபெய்தது

1983 ஆம் ஆண்டில் சென்னையில் கடும் வரட்சி நிலவிய போது அமெரிக்கர்கள் செயற்கை முறையில் மழை பெய்விக்க முற்பட்டுத் தோல்வி கண்ட நிலையில் இவ்வாலயத் தொண்டர்கள் யாக பூஜை செய்து பெரும் மழையைப் பொழிவித்தார்கள். 1986ஆம்ஆண்டில் உலக சமாதான வேள்வி யொன்றை நடாத்தி, நிகழவிருந்த உலகப் போரைத் தவிர்த்தாள். இதன் பயனாக வளைகுடாப் போர் நிறுத்தம், சோவியத் அமெரிக்கத் தலைவர்கள் சந்தித்து நடுத்தர ஏவுகணைகளைக் குறைத்துக் கொண்டமை யாவும் நாம் அறிந்தவைகளே.

இவ்வாலயத்திலுள்ள அதர்வண பத்திரகாளிக்குப் பொங்கல் செய்து கொடிய, பில்லி சூனியம் மாறாத நோய்கள் போன்ற எப்பிரச்சினைக்கும் முடிவு கட்டலாம்.

ஒரே தாய் ஒரே குலம் என்பதே இவ்வன்னையின் கொள்கை, இதனால் எல்லோர்க்கும் இரத்தம் சிவப்பு நிறமே என்பதைக் காட்டும் வகையில் தன்னிடம் செவ்வாடை அணிந்து வரும்படி கேட்கின்றாள்,

ச. நடராசா
அல்வாய்

அல்வாயிலும் ஆலயம்

இச் சக்திவாய்ந்த அன்னையின் ஆலயமொன்று யாழ்ப்பாணத்தில்அல்வாய் என்னும் கிராமத்தில் ''கிளானை'' என்னுமிடத்தில் அமைந்துள்ளது. இங்கும் அன்னை பலருடைய தீராத பிணிகளைத் தீர்த்து வருகின்றாள.

இவ்வாலயத்தில் ஆடிப்பூரம், நவராத்திரி, அடிகள அவதாரத் திருநாள் என்படு சிறப்பாகக் கொண்டாடப்பர்கின்றன. உலகமெல்லாம் சக்தி நெறி ஓங்கவேண்டும். ஒவ்வொருவர் மனக் குறையும் நீங்கவேண்டும். ஓம் சக்தி!! ஆதிபரா சக்தி!

# தூய வாழ்விற்குத் துணை செய்யக் கூடியதாய்

# அமைந்த அருள்மொழிகள் நமக்கு வழிகாட்டும்

நம்பிக்கையே வாழ்க்கையின் அச்சாணி. அது கழலாமல் பார்த்துக் கொள்வது நமது கடமை. சொக்கட்டான் ஆடுபவனின் வெற்றியை அவன் உருட்டும் தாயக் கட்டைகள் முடிவெடுக்கின்றன! மனிதனின் வெற்றி தோல்விகளை அவனுடைய நல்வினை தீவினைகளே முடிவெடுகின்றன. கன்று வளரும் போதே கொம்பும் வளர்ந்து விடுகிறது. செல்வம் வளரும் போது செருக்கும் வளர்ந்து விடுகிறது. கற்றாணைப் பனித்துளிகளால் கரைக்க முடியுமா? சான்றோரைப் பழிச் சொற்களால் தாழ்த்த முடியாது. நாம் குடியிருக்கும் வீட்டிற்காக வரி, வாடகை செலுத்துகிறோம். இவ்வுலகத்திற்காக இறைவனுக்கு நாம் கட்டவேண்டியவரி நமது பக்தியே! விளக்கு விட்டிலைத் தேடிவருவதில்லை. விட்டில் தான் விளக்கை நோக்கி ஓடி விழுகிறது. தீமை நம்மைத் தேடிவருவதில்லை. நாம் நம் அறியாமையால் அதைத் தேடி அடைகிறோம்.

ஆத்மஞானம் தேவை

நற்பண்பு இல்லாத மனிதன் உப்பில்லாத பருப்புக்குச் சமம். கரிக்கட்டியைப் பாலால் கழுவினால் கருமை நிறம் போகுமா? நெருப்பிலிட்டால் நிறம் மாறும். அறியாமையைப் போக்க ஏட்டுக்கல்வியால் இயலாது. 'ஆத்ம ஞானம்' என்னும் பேரறிவு தேவை. விஞ்ஞானம் ஆங்கில 'C' எழுத்தைப்போன்றது. முற்றுப் பெறாதது. மெய்ஞானம் என்பது ஆங்கில 'O' எழுத்தைப் போன்றது. பூரணத்துவம் பெற்றது. வாழ்வின் மேடுபள்ளங்களைக் கண்டு கலங்காமல், அவை கற்பிக்கும் பாடங்களால் தெளிய வேண்டும். விளையாட்டு வீரர்களும் ஆட்டத்தின் சட்டங்களுக்கு உட்பட்டே ஆட வேண்டும். வாழ்வென்னும் விளையாட்டில் சமுதாயத்தின் சட்டதிட்டங்கட்குட்பட்டே வாழவேண்டும்.

நூறாண்டுகளுக்கு அழியாத வண்ணங்களைக் கண்டுபிடித்துள்ளனராம் விஞ்ஞானிகள், இறைவனென்னும் விஞ்ஞானி மயிலிறகில் அடித்த வண்ணங்கள் ஆயிரமாயிரமாண்டுகளாக அழியாமல் அப்படியே இருக்கிறது. இரும்பு நல்ல எஃகு ஆவதற்கு உலைக்கூடத்தில் பலமுறை காய்ச்சப் படுத்தப் படுகின்றது. மனிதனும் பல தொல்லைகளூல் உழன்றபின்பே சான்றோனகின்றான். வழக்கறிஞனைப் பார்க்கும்போது வழக்குகள் நினைவுக்கு வருவதுபோல, பக்தனைப்பார்க்கும் போது பரமனின் நினைவு வருகிறது. சர்க்கரை, யும் மணலும் கலந்துவிட்டால் எறும்பு சர்க்கரையை மட்டும் பிரித்தெடுத்துச் செல்கிறது, ஆனால் மனிதன் உண்மைக்கும் போலிக்கும் வேறுபாடு தெரியாது விழிக்கிறான்.

இறைவனை நினைத்து அழ வேண்டும்

சந்திரனிடமுள்ள களங்கத்தினால் நிலவொளி கறுப்பாகத் தெரிவதில்லை. சான்றோரின் புகழில் களங்க மேற்படுத்தினாலும் அவர் தம் பெருமை குன்றுவதில்லை, விளக்கு உயரத்திலிருந்தால் ஒளி அதிக அளவில் பரவி நிலவும். நமது புகழ்பரவ வேண்டுமானால் நாம் உயர்ந்தவராக இருக்கவேண்டும். பிறக்கும் போது நாம் அழுது, இறக்கும் போது பிறரை அழவைக்கிறோம். அழுகையோடு பிறந்து அழுகையோடு மறையும் நாம் இறைவனை நினைத்து சற்று அழவேண்டும், கண்ணீர் மல்கவேண்டும். தொழிற்கூட இயந்திரங்களுக்குக் கூட வாரத்திற்கு ஒருநாள் ஓய்வு தருகின்றனர். நம் உடலிலுள்ள இயந்திரங்களுக்கு. (இந்திரியங்களுக்கு) ஓய்வு கொடுக்க வாரம் ஒருமுறை உண்ணாநோன்பு இருக்க வேண்டும்.

மனிதன் தாலாட்டு இசையோடு பிறந்து, ஒப்பாரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு
வசந்தாமணாளன்

## தினசரி தியானம்

### அடிமை

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லையில்லதோர் அடிமை பூண்டேனுக்கே.

-அப்பர்

இறையே, நான் யாண்டும் உனக்கே ஆட்பட்டிருப்பேனாக.

தீயைச் சேர்ந்தவிறகுக் கட்டைதானே தீமயம் ஆய்விடுகிறது. அப்பொழுது விறகுக் கட்டையிலுள்ள ஈரம் தானே போய் விடுகிறது. விறகுக் கட்டையில் ஒட்டியிருக்கும் குப்பை, செத்தை முதலியனவும் தீமயமாய் விடுகின்றன. கடவுளிடத்து அடிமை புகும் ஒருவன் தானே கடவுள் தன்மை எடுத்துக் கொள்கிறான். கேடுகளெல்லாம் அவனை விட்டு நீங்கி விடுகின்றன. கடவுளுக்கு அடிமையாவதற்கு நிகரான செயல் இல்லை.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

# எங்கள் தலைவர் பிரபாவின் ஆணையை
# காப்பாற்றுவதற்கு தயாராக இருக்கின்றோம்

## ஊர்காவற்றுறையில் சேரலாதன் உரை

(யாழ்ப்பாணம்)

எமது மக்கள் விடிவுக்காக அரசியல் பொருளாதார மீட்சிக்காக நிராயுதபாணிகளாக அரசியற் பணியாற்ற புறப்பட்ட எமக்கு தலைவர் கூறினார் உங்களுக்கு பாதுகாப்புக்கு ஆயுதம் தேவையில்லை. அந்தப் பாதுகாப்பை மக்கள் வழங்குவார்கள் என்று. அந்தத் தலைவரின் அற்புதமான வார்த்தைகள் இன்று நிறைவேறியிருக்கிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சன வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் சேரலாதன் கூறினார்.

விடுதலைப்புலி உறுப்பினரகள் மீது வேலணையில் நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து நேற்றைய தினம் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு முன்பாகவுள்ள திறந்த வெளியரங்கில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்திலேயே சேரலாதன் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி சமாதானச் சூழலில் அரசியல் பணியாற்ற நாம் இங்கு வந்திருக்கிறோம். சமாதானத்தின் காவலர்களாக நாம் இங்கே வந்திருக்கின்றோம். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் எமது மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பல்வேறு கட்டுப்பாடுகள், தடைகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் அகற்ற வேண்டும்.

கோயில்கள், பாடசாலைகள், பொது இடங்கள், மக்களுடைய வீடுகள் என்பவற்றிலிருந்து சிங்கள இராணுவம் வெளியேற வேண்டிய தேவை இருக்கிறது. அதைச் செய்து முடிக்க வேண்டிய பெரும் பொறுப்பு உங்களிடம் இருக்கிறது. இதனை ஏற்றுத்தான் ஸ்ரீலங்கா பிரதமரும் எமது தலைவரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

நாங்கள் போரிலே வெற்றி பெற்று மார்தட்டியபடியே இந்த மண்ணுக்குள் வந்தோம். 20 ஆயிரத்திற்கும் அதிகமான இராணுவம் எமது தலைவர் இருக்கக் கூடிய இடங்களை நோக்கி படை நகர்த்தலை மேற்கொண்டு முன்னேறத் தொடங்கியது.

இந்த நேரத்தில்தான் நாங்கள் ஓயாத அலை-3 என பாயத் தொடங்கினோம். ஆனையிறவிலிருந்த இராணுவத்தை அடித்து விரட்டி விட்டு யாழ்ப்பாண குடாநாட்டின் எல்லைவரை வந்தோம். மிகப் பெரிய பலத்தோடு வந்தோம் தச்சுவாலை இராணுவத்தை பொசுக்கினோம்.

அந்தத தோல்விக்குப் பின்னால் யாழ் மாவட்டத் தளபதி சொன்னார் புலிகளிடம் 64 மல்ரி பரல்கள் பொருத்தப்பட்ட நவீன ஆயுதங்கள் இருக்கின்றன. அதனால்தான் அவர்களை வெற்றிகொள்ள முடியவில்லை என்று.

போர் செய்ய நாங்கள் தயார் போருக்கு தயாரான நிலையில் தான் நாம் இருந்தோம். அந்தப் பலமான ஒரு நிலைதான் இன்று இந்தச் சூழ்நிலைக்கு எம்மைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது.

எமது தலைவர் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட அந்த ஆணைக்காக நாங்கள் தவம் கிடந்து அதனை காப்பாற்றத் தயாராகவிருக்கின்றோம். எமது மக்களிற்கு நிம்மதியான ஒரு வாழ்வை ஏற்படுத்தித் தருவதற்கு தலைவர் துணிந்திருக்கிறார். நாங்கள் எமது மக்களிற்காக உயிரையும் கொடுக்கத் துணிந்திருக கின்றோம்.

வேலணையில் எமது உறுப்பினர் களை கடற்படையினர் மூர்க்கமாகத் தாக்கி செம்மண்ணை கழுத்தில் பிடித்து இழுத்து வாகனத்தில் ஏற்றமுற்பட்டனர். ஆனால் அந்த கிராமத்தில் இருந்த 40 வரையிலான பொதுமக்கள் ஓடி வந்தார்கள். ஒரு தாய் கைக்குழந்தையுடன் ஓடி வந்தாள். அந்த தாயின் எழுச்சி எங்களிற்கு போதும். அந்த 40 மக்களுடைய எழுச்சி எங்களிற்கு போதும் என்றும் கூறினார்.

(து-41,19,6,2, 75)

---

### எழுச்சிப் பேரணியை...

திரும்பும் போது பெண் இராணுவத்தினர் பேரணியில் சென்று திரும்பிய வாகன இலக்கங்களையும் குறித்துக்கொண்டனர்.

தீவகக் கடற்படைத் தளபதி சந்தகிரி அல்லைப்பிட்டிச் சந்தியில் இருந்தவாறு ஊர்வலத்தில் சென்ற வாகனங்களையும்,மக்களையும் அவதானித்த வண்ணம் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம.41,6,19)

---

### ஏழு வருடங்களின்...

பொலிஸாரும் இராணுவத்தினரும் நிராயுதபாணிகளாக காணப்பட்டனர்.

அல்லைப்பிட்டியில் இருந்து வாகனத் தொடரணி வேலணை, சரவணைப் பகுதியூடாக் கரம்பன் சந்தி வரை சென்றடைந்தது. அங்கு குழுமி நின்றிருந்த தீவக மக்க்ளும் தீவகப் பாடசாலை மாணவர்களும் வாகனப் பேரணியை வரவேற்றனர்.

வாகனப் பேரணியில் சென்றவர்களும் கரம்பனில் குழுமிநின்ற தீவக மக்களும், மாணவர்களும் இணைந்து நடைபவனியாக ஊர்காவற்றுறைச் சந்தி ஊடாக ஊர்காவற்றுறை பிரதேச சபை திறந்தவெளி கலையரங்க மைதானத்தை பிற்பகல் 1.45 மணிக்கு சென்றடைந்தனர்.

கரம்பன் சந்தியில் இருந்து புறப்பட்ட மக்கள் பேரணியை ஊர்காவற்றுறை வரை வீதிகளில் இருமருங்குகளிலும் நின்றிருந்த மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பி வரவேற்றனர்.

இக்கண்டன எழுச்சிப் பேரணியை

---

### தமிழ் மக்களை...

அப்பாவித் தமிழ் மக்கள் மீது வீசப்பட்ட கைக் குண்டால் இருவர் கால் துண்டிக்கப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் தனியார் பேரூந்துகளும் கிழக்கு போக்குவரத்துசபை பேரூந்துகளும் காடையர்களால் கற்கள் வீசி சேதமாக்கப்பட்டுள்ளது. மாணவர்களும் அடித்து சித்திரவதைப்படுத்தப்பட்டுள்ளனர்.

எனவே அன்பார்ந்த தமிழீழ மக்களே தீய சக்திக்ளின் கைக்கூலிகளாக இருப்பவர்கள் செய்யும் கொடூரத்திற்காக அப்பாவி முஸ்லிம் மக்களுக்கு எவ்வித தீங்கும் செய்யாது எமது உரிமைகளைப் பெற அமைதிகாத்து அணிதிரளுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

---

### மூதூர் சம்பவத்தை கண்டித்து
# மட்டு- அம்பாறையில் நேற்று பூரண ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

மூதூர் பகுதியில் அண்மையில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களைக் கண்டித்தும், தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்களிடம் இருந்து வரி வசூல் செயவதைக் கண்டித்தும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களில் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

இக் ஹர்த்தால் காரணமாக வர்த்தக நிலையங்கள், போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்ததுடன் பாடசாலைகள், அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள் யாவும் செயலிழந்தன.

நேற்று இடம்பெற்ற இக்ஹர்த்தாலை அடுத்து அம்பாறை மாவட்டத்தில் பூரண அமைதி நில்விய போதும் வாழைச்சேனையில் இனவன்முறைச் சம்பவங்கள் பரவலாக வெடித்தன. இவ்வன்முறைச் சம்பவங்களை பொலிஸார் கட்டுக்குள் கொண்டு வந்தபோதும் அங்கு இன்னமும் பதற்றமும் தணியவில்லை என்றும் தெரிவிக்கப் படுகிறது. (வ)

---

### வாழைச்சேனையில்...

குழுவொன்று வாழைச்சேனையில் வைத்து தாக்குதல் நடத்தியது.

இதேபோல் கொழும்புக்குப் புறப்பட்ட இரண்டு தனியார் பஸ் வண்டிகளும் இத்தகைய தாக்குதல் களுக்கு உள்ளானது.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான சில கடைகள், சிலரால் தீ வைக்கப்பட்டதுடன், வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

வாழைச்சேனைப் பகுதியில் முஸ்லிம் குழு மேற்கொண்ட குண்டுத் தாக்குதலின் போது நான்கு தமிழர்கள் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சில முஸ்லிம்களும் ஆங்காங்கே அடிகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் அனைவரும் மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இதேவேளை நேற்று மாலை வாழைச்சேனையில் இடம்பெற்ற மற்றொரு கிரெனைட் வீச்சுச் சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் குணசேகரம் (வயது 19) என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

இதில் 14வயது மதிக்கத்தக்க முஸ்லிம் இளைஞர் ஒருவரும் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர்.

இம் மோதல் சம்பவங்களை அடுத்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகிறார்கள்.

சம்பவம் நடந்த இடத்திற்கு மேலதிக பொலிஸார் அனுப்பப்பட்ட போதும் அங்கு தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகிறது.

இதனை அடுத்து மட்டக்களப்பு எம்.பி யோசப் பரராஜசிங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் தொடர்பு கொண்ட போது நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் ரணில் உறுதியளித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

### தனியார் பஸ்...

இதேவேளை புகையிரத சேவைக் கட்டணங்களோ அல்லது மக்கள மயப்படுத்தப்பட்ட பஸ் போக்குவரத்துச் சேவைக் கட்டணங்களோ அதிகரிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### டக்ளஸ் ...

விற்றுவிட்டு மறத்தமிழினத்தையும் விற்கவா போகிறாய்.

அரச கடற்படையே தீவகத்தில் இருந்து வெளியேறு சமாதானத்தைக் குழப்பாதே ஆகிய கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதேவேளை கண்டனப்பேரணியில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் உருவப் படமும், இராணுவ அராஜகங்களை எடுத்துக் காட்டும் வகையிலான. இராணுவச் சப்பாத்தும், தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.(ம-416)

---


## இலங்கை வங்கி யாழ் மேற்தரக் கிளை
## வாடிக்கையாளருக்கான முக்கிய அறிவித்தல்

01.07.02 முதல் யாழ் மேற்தரக் கிளையின் வங்கிச் சேவைகள் கணனி மய்மாக்கப்படுவதை முன்னிட்டுச் சில ஆரம்ப வேலைகள் நடைபெறவேண்டியுள்ள்தால் நாளை (29.06.02) சனிக்கிழமை மட்டும் இவ்வங்கி வாடிக்கையாளர் சேவைகளுக்காக மூடப்பட்டிருக்கும். இதனால் தங்களுக்கு ஏற்படக்கூடிய வசதியீனங்களுக்கு மனம் வருந்துவதோடு எதிர்வரும் காலங்களில் பூரண கணனி மயப்படுத்தப்பட்ட சேவைகளை உங்களுக்கு அளிப்போமென்று இத்தால் அறியத்தருகிறோம்.


## மரண அறிவித்தல்

# மரண அறிவித்தல்

## திருமதி மரியம்மா பத்திநாதர்

(அளவெட்டி)

(இளைப்பாறிய ஆசிரியை)

அலுக்கை அளவெட்டியைச் சேர்ந்த திருமதி மரியம்மா பத்திநாதர் நேற்று 27.06.2002 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் இளைப்பாறிய அதிபர் பத்திநாதர்(பயஸ்), அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெயரட்ணம், ஞானரட்ணம், தேவரட்ணம், யோகரட்ணம், பாலரட்ணம், ஜீவரட்ணம், அருட்சகோதரி புளோறினா நேசரட்ணம் (தி.சி.க), நவரட்ணம், குணரட்ணம், தவரட்ணம், தனரட்ணம், அருட்பணி ஜெபரட்ணம், விமலரட்ணம், ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசேந்திரம், காலஞ்சென்ற இராசநாயகம், மரியதாஸ், நவமலர், யசிந்தா, பபாமரியற்றா, ஆனந்தராசா, அருள்தாசன், ஜெகசோதி ஆகியோரின் அன்பு மாமியாரும் பெனராஜ், சாந்தி, ஆனந்தி, ஜெயந்தி, சுகந்தராஜ், மொறீன், டெஸ்மன், மீரா, இதயராஜ், அமல்ராஜ், வனிதா, எல்றோய், லியோன், ஷிரோன், விமலினி, ஜெரோன், டிலீசியா, வளன், அமலினி, நிமலினி, ஜான்சி, வலென்ரீனா, மிலோஜன், மிலோஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ராகுல், ராகவி, ஸ்ரெபானி, சாளினி, தானியா, ஜோன், டிலான், டேமியன், ரொஷான், யோசுவா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை 29.06.2002 சனிக்கிழமை பி.ப 3.30 மணியளவில் அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியைத் தொடர்ந்து அளவெட்டி சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்

ஞா.பத்திநாதர்
(கணவர்)
அருட்பணி ஜெபரட்ணம்
(மகன்)

அலுக்கை,
அளவெட்டி.

[5609]

றுறை வரை வீதிகளில் இருமருங்குகளிலும் நின்றிருந்த மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பி வரவேற்றனர்.

இக்கண்டன எழுச்சிப் பேரணியை அடுத்து யாழ் குடாநாடு பூராகவும் உள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை திறந்த வெளிக் கலையரங்கில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்திற்கு தீவக, நலன் காக்கும் அமைப்பின் தலைவர் எஸ். சத்தியதாசன் தலைமை தாங்கினார்.

இக்கண்டனக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பரணி, தமிழர் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான என். ரவிராஜ், என்.கே.சிவாஜிலிங்கம், தென்மராட்சி மனிதநேய அமைப்புக்கள் சார்பில் சாவகச்சேரி றிபேக் கல்லூரி அதிபர் எஸ். அருந்தவராசா யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறில், யாழ் பல்கலைக்கழக மாணவி ஜெயா, நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன் உட்படப் பலர் உரையாற்றினர்.

(வ-41,06,19,02,75)


வலம்புரியின்

வாரமலர்

சங்குநாதம்

ஒவ்வொரு

திங்கட்கிழமைகளிலும்

வெளிவரும்


சேவைகளை உங்களுக்கு அளிப்போமென்று இத்தால் அறியத்தருகிறோம்.

சிரேஷ்ட முகாமையாளர்
இலங்கை வங்கி
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

(C/4537)




இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.